# சமூக அறிவியல்

## பகுதி -2

## வகுப்பு VI

Social Science
Part - 2
Tamil Medium

கேரள அரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்(SCERT), கேரளம்
2016

KT 641-1/ Soc. Sci. (T)- 6 (Vol-2)

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர். எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன். என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
*Website* : www.scertkerala.gov.in, *e-mail* : scertkerala@gmail.com
Phone : 0471 - 2341883, Fax : 0471 - 2341869
Typesetting and Layout : SCERT, Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

சமூக அறிவியல் சமூகத்திற்கு உரிய வாயிலாகும். இவ்வாயிலைத் திறந்தால் அறிவினுடையவும் விந்தைகளுடையவும் மிகப்பெரிய உலகைச் சென்றடைவீர்கள். அங்கு வரலாற்றின் சிறப்புகள், யாத் திரிகர்களின் குறிப்புகள், காலத்தின் கனவுகள், நமது நாட்டின் அழியா கலாச்சார முத்திரைகள், பூமி கூறும் கதைகள், கருத்துகள், மண், மழை, மனிதன் என அனைத்தும் உள்ளன. உற்பத்தி என்ற பொருளாதார செயல்களும் ஜனநாயக உரிமைகளும் உள்ளன. அவ்வாறு பல சிறப்புகள் உள்ள உலகத்தையே உங்களுக்காக சமூக அறிவியல் பாடப்புத்தகம் வழி கொடுக்கப்படுகிறது. வர லாற்றை உட்கொள்ளவும் இயற்கையை விரும்பவும் சிறப்புகளை ஆனந்தமாக்குவதற்குமான அறிவுபெறும் குடிமகனாக மாறுவ தற்கு சமூக அறிவியல் பாடப்புத்தகம் உதவுகிறது. கலந்துரையா டல்கள், விவாதங்கள், தேடல், ஆய்வுகள் போன்றவை உங்கள் வகுப்பறையை சிறந்ததாக்கட்டும்!

வாழ்த்துக்களுடன்,

**முனைவர் ஜெ. பிரசாத்**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவனந்தபுரம்.

# Text Book Committe members

## Participants

**Abdul Azeez. V. P** HSST,VPKMM HSS, puthoorpallickal.

**Jeyakrishnan. O.K** HSA, K. P. C. H. S. S Pattanoor, Kannur.

**Nisha M.S** UPSA, P.H.S.S Mezhuveli, Pathanamthitta.

**Nishanth Mohan. M** HSST, Govt. Tamil HSS, Chalai Thiruvananthapuram.

**Pradeepan. T** H.S.S.T, G.H.S.S. Kallachi, Kozhikode.

**Dr. Babukuttan. P** Senior Lec. DIET Kollam.

**Yusef Kumar. S. M** HSST,Govt. Model Boys HSS, Attingal.

**Rajan. P. P** U.P.S.A, G.U.P.S Mundothuprampa, Malappuram.

**Vijayakumar. C. R** HSST, Govt Boys HSS Miruthumala.

**Shanlal. A.B** HSST, Govt. Model Boys H.S.S Haripad.

**H.A. Saleem** Headmaster, G.U.P.S Kumaramchira Sasthamkotta.

## Experts

**Dr. Abul Razak. P. P.**
Associate Proffeser, Dept.of History P.S.M.O College, Thiroorangadi

**Dr. Ashok Alex**
Associate Proffeser, Dept. of Economics, Womens Collage, Thiruvananthapuram.

**I. P. Joseph**
Assistant Proffeser (Rtd.), SCERT

**Dr. Preyesh. M**
Assistant Proffeser, Dept. of Economics, University Collage,Thruvananthapuram

**P.S. Manojkumar**
Asst. Proffeser, Dept. Of History , K.K.T.M.College, Kodungallor, Thirusor.

## Acadamic Co-ordinator

**Chithra Madhavan** , Reserach Officer SCERT

**Manoj. K.V** , Reserach Officer SCERT

## Tamil Version

**Ajiprakash,** Govt. H S, Koovakkad, Kollam.

**Durairaj .S,** GUPS Pambanar, Idukki.

**S.Padmakumar,** HSA, Govt H.S. Koovakkadu. Kollam.

**Mary Stella Rosaline ,** HSA(Rtd) GHSS Karamana

**Dr. Nisha Raffi,** Asst. Prof. in Tamil, University College, Tvpm.

## Academic Coordinator

**Dr. Sahaya Dhas D. ,** Research Officer, SCERT

# உள்ளடக்கம்


07. இடைக்கால இந்தியா கலையும் இலக்கியமும் 103

08. இடைக்கால உலகம் 119

09. இடைக்காலக் கேரளம் 131

10. மக்களாட்சியும் உரிமைகளும் 143

11. சமூக வாழ்க்கையில் வேற்றுமைகள் 157

12. இயற்கையின் நன்கொடை 171

## இந்தப் புத்தகத்தில் எளிமைக்காகச் சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன


அதிக வாசிப்பிற்கு– மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியதில்லை


கற்றல் முன்னேற்றத்தைக் குறிப்பிடும் கேள்விகள்


செயல்பாடுகள்



தொகுப்பு


முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை


மதிப்பிடலாம்


தொடர் செயல்பாடுகள்


சுய மதிப்பீடு



# 7

# இடைக்கால இந்தியா கலையும் இலக்கியமும்



*கி.பி ஆயிரத்தி இருநூற்றி நாற்பத்தாறில்(1246) சந்திரபாக நதிக்கரையில் உலகப்புகழ் பெற்ற சூரியக் கோவிலிற்கு அடித்தளம் இடப்பட்டது. இதனைக் கட்டுவதற்கான கற்கள் தொலைவிலுள்ள பல மலைத் தொடர்களிலிருந்து கொண்டு வரப்பட்டது. நீலகிரியிலிருந்தும் தொலைவிலுள்ள பல நாட்டுப் பகுதிகளிலிருந்தும் வெள்ளை, கறுப்பு, நீலம் போன்ற நிறங்களிலுள்ள சிலைகளும் கொண்டு வரப்பட்டது....... கோவிலின் மேல்பகுதியில் கலசம் வைப்பதற்காக இருபத்திஐந்து அடி உயரமும் ஐம்பதாயிரம் மண் எடையுமுள்ள சிலைகளை நூற்றிற்கு மேற்பட்ட மைல்தூரம் நீர் வழி கொண்டு வரப்பட்டு இருநூறு அடி உயரத்தில் கோவில் கோபுரத்தில் வைத்தனர்... ஆயிரத்தி இருநூறு சிற்பிகள் தங்களுடைய சொந்த சுகங்களையும் ஆசைகளையும் தவிர்த்துக் கொண்டு உறுதி பூண்டனர். "கொணார்க்கில் கலசத்தை வைப்பது வரை திரும்புவதில்லை... அவர்கள் அனைவரும் ஒரு முகத்தோடு பனிரெண்டு ஆண்டுகாலம் தொடர்ச்சியாக வேலை செய்தனர்."*

புகழ்பெற்ற ஒடிய இலக்கியவாதி பிரதிபாராய் “சிலாபத்மம்” என்ற நாவலில் கொணார்க்கிலுள்ள சூரியக் கோவிலைப் பற்றி கூறியதன் விபரங்களே மேற்கூறப்பட்டுள்ளது.

இதிலிருந்து என்னென்ன விவரங்களை அறியமுடிகிறது.?

- கோவில் கட்டுவதற்குத் தேவையான பல வண்ணத்திலுள்ள சிலைகள் இந்தியாவின் பல இடங்களிலிருந்து கொண்டுவரப் பட்டது.
-
-

கொணார்க்கிலுள்ள சூரியக் கோவிலில் மட்டுமல்லாமல் ஏராளமான வேறு கட்டிட வேலைகளும் இடைக்கால இந்தியாவில் நடைபெற்றி ருந்தது. அவை உருவான விதத்தையும் அவற்றின் சிறப்புக்களையும் குறித்து ஒரு தேடல் நடத்துவோமா?

தென் இந்தியாவில் காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய அரசர்களே பல்லவர்கள். அவர்களுடைய முக்கிய துறைமுக நகரமே மகாபலிபுரம். பல்லவ அரசரான நரசிம்மவர்மனின் காலத்தில் கட்டப்பட்டக் கோவில்கள் பஞ்சரதங்கள் என்று அழைக்கப்படுகிறது.



மகாபலிபுரத்திலுள்ள பஞ்சரதங்கள்

அவை ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவையாகும். இந்தியாவின் பல பகுதிகளிலும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டக் கோவில்கள் கட்டப்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவிலுள்ள எல்லோரா குகைக்கோவில்களும் இதைப் போன்றதாகும். இவை ஆறாம் நூற்றாண்டு முதல் பனிரண்டாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் கட்டப்பட்டவையாகும். பௌத்தர்,

சமணர் வைஷ்ணவர், சைவர் போன்றவர்களின் கோவில்கள் ஒன்றிணைந்துக் காணப்படும் பகுதியே எல்லோரா.




எல்லோராவிலுள்ள குகைக் கோவில்கள்

பிற்காலத்தில் செதுக்கி மினுக்கியப் பாறைகளைப் பயன்படுத்தி உயரம் கூடிய கோயில்கள் கட்டும் முறை நடைமுறைக்கு வந்தது. இக்கோயில்களில் பெரும்பான்மையானவை பல மாடிக் கோயில்களாகும்.

சோழ அரசரான ராஜராஜன் கட்டிய தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோவிலும் அஸ்ஸாமிலுள்ள காமாக்கிய கோவிலும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.


அஸ்ஸாமிலுள்ள காமாக்கிய கோவில்


தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோவில்

பிற்காலத்தில் கோவில் சுவர்கள் சிலைகளினால் அலங்கரிக்கும் முறை பரவலாகக் காணப்பட்டது. இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை என்பவையிலுள்ள கதைகளுக்கேற்ற வடிவங்களைக் கோவில் சுவர்களில் செதுக்கி வைத்தனர். அதுமட்டுமன்றி போர்காட்சிகளுடையவும் நடன-இசை காட்சிகளுடையவும் சிலைகள் சுவர்களில் இடம் பிடித்தது.


இசைக்காட்சி


போர்காட்சி



நடனக்காட்சி



மத்தியபிரதேசத்திலுள்ள கஜீராஹோ கோவில்

கோவில் சுவர்களைச் சிலைகளினால் அலங்கரிப்பதற்கான எடுத்துக் காட்டே மத்தியபிரதேசத்திலுள்ள கஜுராஹோ கோவில்

"இந்தியாவில் இன்று காணப்படும் கோவில் கட்டும் முறை பல படிநிலைகளின் வழி வளர்ச்சி பெற்றதாகும்". நிரூபிக்கவும்.

சுல்தான்களின் ஆட்சிகாலத்தில் இந்தியாவில் புதிய வாஸ்து முறை உருவானது. இது இந்தோ -இஸ்லாமிய வாஸ்து முறை என அறியப் படுகிறது.


நுழைவாயில்


தாழிக்குடம்


மினாரம்

வாஸ்து கலைத்துறையில் உள்ள வல்லுநர்களைத் துருக்கி, பாரசீகம் போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவிற்குக் கொண்டுவந்தனர். அவர்களுடன் சிற்பிகள், அப்பகுதியிலுள்ள தொழிலாளர்கள், கல் உடைப்பவர்கள் போன்றவர்களும் கட்டுமான செயல்களில் பங்கு கொண்டனர். இவர்கள் ஒன்றிணைந்த கால கட்டத்தில் இந்தோ- இஸ்லாமிய வாஸ்து முறையிலுள்ள பல்வேறு கட்டிடங்கள் உருவானது. இந்த வாஸ்து கலை வடிவத்தின் சில தனித்தன்மைகளை ஆராயலாம்.

- நுழை வாயில்களும் தாழிக் குடங்களும் மினாரங்களும் உள்ளதே இதன் முக்கிய சிறப்பியல்புகளாகும்.
- கட்டிடங்களின் அழகிற்காகப் பூக்களுடையவும் தாவரங்களுடையவும் வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன.


தாவரங்களுடையவும் பூக்களுடையவும் உருவங்கள்


குத்துப்மினார்

- கட்டிடங்கள் கட்டுவதற்கு சுண்ணாம்பு, சிவப்புக்கல், மார்பிள் போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- கட்டிடங்களோடு சேர்ந்து பரந்து விரிந்த பூந்தோட்டங்களையும் அமைத்தனர்.

இந்தியாவில் இந்த வாஸ்துமுறையின் அடிப்படையில் கட்டப்பட்ட முதல் நினைவுச் சின்னம் குத்துப்மினார்.

குத்துப்மினாரைக் கட்டத் துவங்கியவர் சுல்தான் ஆட்சியின் துவக்கக் காரரான குத்துபுதீன் ஐபக் ஆவார். இல்துமிஷ் இதனைக் கட்டிமுடித் தார். உயர்ந்த கோபுரங்களும் கோபுரத்திலிருந்து நீங்கி நிற்கின்ற மேல் மாடிகளும் இதன் சிறப்பம்சங்களாகும்.

மொகாலாயர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தோ- இஸ்லாமிய முறை அதிகமாகப் பரவியது. மொகாலாய அரசர்கள் இம்முறையில் பல்வேறு கோட்டைகள் வழிபாட்டுத் தலங்கள், கல்லறைகள் போன்றவற்றைக் கட்டினர். அவற்றில் சிலவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

டில்லியில் அமைந்துள்ள ஹுமாயூன் கல்லறை இம்முறையில் கட்டப் பட்டதாகும். அழகான பூந்தோட்டத்தின் நடுவில் இக்கல்லறை அமைந் துள்ளது. சிவப்பு மணல் கல்லும்வெள்ளைக் கல்லும் வைத்துக் கட்டப் பட்டுள்ளது. இதனை மாதிரியாகக் கொண்டே தாஜ்மஹால் கட்டப் பட்டுள்ளது.


ஹுமாயூனின் கல்லறை- டில்லி


தாஜ்மஹால்

மொகலாய சக்கரவர்த்தியான ஷாஜஹான் தனது மனைவி மும்தாஜ் மஹலின் நினைவாக ஆக்ராவில் கட்டிய தாஜ்மஹால் இந்தோ-இஸ்லாமிய முறைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இதனைக் கட்டுவதற்கு வெள்ளைப் பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டது.


செங்கோட்டை

படத்தில் காண்கின்ற கட்டிடம் எது? இப்பெயர் பெறக் காரணம் என்ன?

மொகலாய ஆட்சிக் கால கோட்டைகளில் முக்கியமானது ஷாஜஹான் சக்ரவர்த்தி கட்டிய டில்லியிலுள்ள செங்கோட்டை ஆகும். இது முழுவதுமாகச் சிவப்பு மணல் கற்களால் கட்டப்பட்டதாகும்.

இதே முறையில் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் காலகட்டத்தில் கட்டப்பட்ட வேறொரு கட்டிடமே டில்லியிலுள்ள ஜும்மா மசூதி. இது பளிங்குக் கற்களும் சிவப்புக் கற்களும் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளது.



ஜும்மா மசூதி-டில்லி

பாமினி சுல்தான்களின் காலத்தில் கட்டப்பட்டக் கோல்கும்பஸ் (பிஜப்பூர்) குத்தப் ஷாஜி சுல்தான்களின் காலத்தில் கட்டிய சார்மினார் (ஹைதராபாத்) என்பவையும் இந்தோ- இஸ்லாமிய வாஸ்து முறையில் கட்டப்பட்டதாகும்.



இடைக்கால இந்தியாவிலுள்ள முக்கியமான கட்டிடங்களின் விபரங்களைச் சேகரித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை முழுமையாக்கவும்.

| படம் | பெயர் | தனித்தன்மைகள் |
|---|---|---|
|  | **பிரகதீஸ்வரர் கோவில்** | • தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூரில் அமைந்துள்ளது.<br>• இதனைக் கட்டியவர் சோழ அரசரான ராஜராஜன்.<br>• இந்தியாவில் பரப்பளவிலும், உயரத்திலும் உள்ள கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.<br>• பாறைகளைச் செதுக்கி மினுக்கி அடுக்குகளாக்கிப் பல மாடிகளாக கட்டப்பட்டுள்ளது. |
|  | | •<br>•<br>• |
|  | | •<br>•<br>• |
|  | | •<br>•<br>• |
|  | | •<br>•<br>• |

இக் காலகட்டத்தில் தென்இந்தியாவில் விஜயநகர அரசர்கள் கட்டிய முக்கியமான கோவில்கள் விட்டல் சுவாமி கோவிலும் ஹஸார ராம கோவிலும் ஆகும். பழைய கால கட்டிடங்களிலிருந்து இவற்றிற்கு உண்டான மாற்றங்கள் என்னென்ன?

இவை பாறைகளைச் செதுக்கி மினுக்கி அடுக்குகளாகப் பல மாடிகளாகக் கட்டப்பட்டவையாகும் இத்துடன் :



விட்டல் சுவாமி கோவில்

- கோவில்களோடு இணைத்து மண்டபங்களையும் கட்டினர்.
- அழகானத் தூண்களையும் கட்டினர்.
- சிறிய கட்டிடங்களை ஒன்றிணைத்து கோவில்களைப் பெரிதாக்கினர்.

பதினாறாம் நூற்றாண்டில் இந்தியாவில் போர்த்துகீசியர்கள் புதிய வாஸ்து முறையை அறிமுகப்படுத்தினர். இது கோதிக் முறை என்றறியப்படுகிறது. கூர்மையான கோபுரங்களும் நுழைவாயில்களும் இதன் முக்கியச் சிறப்புகளாகும். கொச்சியிலுள்ள புனித பிரான்ஸிஸ் தேவாலயமும் கோவாவிலுள்ள போம்ஜீஸஸ் தேவாலயமும் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.



கொச்சியிலுள்ள புனித பிரான்ஸிஸ் தேவாலயம்


மேலே கூறப்பட்டுள்ள வாஸ்து முறைகளால் அமைக்கப்பட்டக் கட்டிடங்கள் இந்தியாவின் செல்வாக்குமிக்க கலாச்சார வேறுபாட்டின் சின்னங்களாகும்.



இந்தோ- இஸ்லாமிய வாஸ்து கலைவடிவில் கட்டப்பட்டக் கட்டிடங்களின் பொதுவான சிறப்பியல்புகளைக் கண்டறிந்து எழுதவும்

## இசையும் ஓவியக்கலையும்

இடைக்கால இந்தியாவில் இசைத்துறையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டது. தென்னிந்தியாவில் நிலை கொண்டிருந்த கர்நாடக இசை இக்காலகட்டத்தில் மிகுதியாக வளர்ச்சியடைந்தது. கர்நாடக இசையின் சிறந்த மேதையே புரந்தரதாஸர்.



சித்தார்



தபலா

சுல்த்தானிய -மொகலாய காலகட்டத்தில் பாரசீக இசையின் தாக்கத்தின் பலனாகப் புதியதொரு இசை வடிவம் கொண்டது. இது ஹிந்துஸ்தானி இசை என்றறியப்படுகிறது. அமிர்குஸ்ரு. தான்ஸன் போன்றவர்கள் அக்காலத்திலுள்ள புகழ்பெற்ற இசைஞானிகளாவர். கவ்வாலி என்ற புதிய இசைவடிவம் இக்காலத்தில் உருவானது. கவ்வாலி இசையின் வளர்ச்சிக்கு அமிர்குஸ்ரு பெரும் பங்களித்தார். ஏராளமான புதிய இசைக் கருவிகள் இக்காலகட்டத்தில் நடைமுறைக்கு வந்தன. தபலா, சித்தார் போன்றன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.



**கவ்வாலி**

சூபிவரியன்மார் வாழ்ந்திருந்த விசாலமான இடங்களி(கான்குவா) உருவான ஒரு இசையே கவ்வாலி. உருது மொழியில் எழுதப்பட்ட பக்திப் பாடல்களை இசைக்கருவிகளின் உதவியோடு முறையான தாளத்துடன் வெளியிடுவதே இதன் தனித்தன்மையாகும்.

இசையில் ஏற்பட்டது போன்று ஓவியக் கலையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டது.

படங்களைக் கவனிக்கவும்...



மொகலாய ஓவியக்கலை-பைபிளிலுள்ள காட்சி



மொகலாய ஓவியக்கலை-அரண்மனைக் காட்சிகள்



மொகலாய ஓவியக்கலை இராமாயணத்தில் உள்ள காட்சிகள்



மொகலாய ஓவியக்கலை இயற்கை காட்சிகள்

அந்தக் காலத்தில் ஓவியக் கலைக்கு ஏற்றுக்கொண்ட கருத்துகள் எவையெல்லாம்?

இராமாயணம், பைபிள், அரண்மனை வாழ்க்கை, இயற்கைக் காட்சிகள் போன்றன ஓவியக் காட்சிகளாயின.

## இலக்கியம்

இடைக்கால இந்தியாவில் வாஸ்து, இசை, ஓவியம் போன்று இலக்கியத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

இடைக்கால இந்தியாவில் உருவான பக்தி இயக்கமும் சூஃபி இயக்கமும் அக்கால இலக்கியத்தின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்தது.

பக்தி இலக்கியத் தோற்றம் பல வட்டார மொழிகளுக்கு ஊக்கமூட்டியது. பக்தி இயக்கத்தின் கவிதைகள் எல்லாம் சாதாரண மக்களின் மொழியிலேயே எழுதப்பட்டன. இது வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. இவ்வாறு வளர்ந்த மொழிகளே

- மலையாளம்
- தெலுங்கு
- கன்னடம்
- மராத்தி
- இந்தி
- வங்காளம்
- குஜராத்தி



### பக்தி இயக்கம்

இறைவனிடம் அன்பும் பக்தியும் அடிப்படையாகக் கொண்டு தென்இந்தியாவில் உருவானதே பக்தி இயக்கம். தென் இந்தியாவில் பக்தி இயக்கத்தில் நாயன்மார்கள், ஆழ்வார்கள் என இரு பிரிவுகள் இருந்தன. நாயன்மார்கள் சிவபக்தர்களாகவும் ஆழ்வார்கள் விஷ்ணுபக்தர்களாகவும் இருந்தனர். பதினான்காம் நூற்றாண்டில் இந்த இயக்கம் வட இந்தியாவிலும் பரவியது. குருநானக், கபீர்தாஸ், துளசிதாஸ், சூர்தாஸ், துக்காராம், மீராபாய், சைதன்யா போன்றவர்கள் வடஇந்தியாவில் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர்களாவர்.



### சூஃபி இயக்கம்

முஸ்லீம்களிடையே. ஆடம்பர வாழ்க்கைக்கு எதிராகவும் தெய்வீக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும் இருந்தவர்கள் சூஃபிகள். சூஃப் என்ற அரபு வார்த்தையிலிருந்து உருவானதே சூஃபிஸம் என்ற வார்த்தை. காஜா மொய்னுதீன் சிஸ்தி, நிசாமுதீன் அவ்லியா போன்றவர்கள் அக்கால சூஃபி இயக்கத்தின் பிரச்சாரர்களாக இருந்தனர்.

இக்கால கட்டத்தில் சில முக்கியமான வட்டார மொழிகளில் உருவான இலக்கிய நூல்களும் அவற்றை எழுதியவர்களின் பெயரும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**வட்டார மொழிகளும் நூல்களும்**

**மலையாளம்**
அத்யாத்ம ராமாயணம் – எழுத்தச்சன்

**தமிழ்**
ராமாவதாரம் (கம்பராமாயணம்) – கம்பர்

**இந்தி**
ராமசரிதமானஸ்
துளசிதாஸ்

**தெலுங்கு**
மகாபாரதம் – நன்னையா

**கன்னடா**
விக்ரமார்ஜ்ஜன விஜயம் (பம்பபாரதம்) – பம்பா

**ஒடியா**
ஒடிய மகாபாரதம் – சரளதாஸன்

**மராத்தி**
மராத்தி பாகவதம் – ஏக்நாத்

**குஜராத்தி**
குஜராத்தி பாகவதம் – பிரேமானந்தா

**வங்காளம்**
வங்காள ராமாயணம் – கிருதிவாஸன்



வட்டார மொழிகளில் உருவான நூல்களைக் குறித்தும் எழுத்தாளர்களைக் குறித்துமுள்ள விபரங்களைப் படத்திலிருந்து சேகரித்து அட்டவணையை முழுமையாக்கவும்.

| வட்டார மொழிகள் | நூல்கள் | இலக்கியவாதிகள் |
|---|---|---|
| | | |

சூஃபி இயக்கம் உருதுமொழியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்தது. அரபு, பாரசீகம் போன்ற மொழிகளும் இந்திய மொழிகளான இந்தியும் சமஸ்கிருதமும் ஒன்றிணைந்ததே உருதுமொழி.

இடைக்கால கட்டத்தில் ஏராளமான நூல்கள் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. மொகலாய சக்ரவர்த்தியான அக்பரின் காலத்தில் மொழிபெயர்ப்பிற்காக ஒரு தனி பிரிவு செயல்பட்டிருந்தது. அக்கால கட்டத்தில் ராமாயணம், மகாபாரதம் போன்று ஏராளமான சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. உபநிஷத்துக் களும், அதர்வ வேதமும் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தது ஷாஜஹான் சக்ரவர்த்தியின் மகனான தாராசுகோ ஆவார். இந்தியாவின் நாகரீகத்தையும், விஞ்ஞானத்தையும் வெளிநாட்டவர்கள் அறிவதற்கு மொழிபெயர்ப்பாளர்கள், முக்கிய பங்கு வகித்தனர். பிற நாடுகளோடு உள்ள கலாச்சார பரிமாற்றத்திற்கு இது காரணமானது.

**இடைக்கால இந்தியா- கலையும் இலக்கியமும்**

- கோவில் கட்டும் முறைகள்
- சுல்த்தானிய- மொகலாய வாஸ்துகலை
  - (இந்தோ- இஸ்லாமிய வாஸ்து கலைவடிவம்)
- ஓவியம்
- இசை
- இலக்கியம்



## தொகுப்பு

- பல காலகட்டங்களின் வழியாக வளர்ச்சி அடைந்ததே இந்திய வாஸ்துமுறை
- இடைக்காலகட்டக் கட்டுமான பணிகளில் பலவித வாஸ்துமுறைகளின் தாக்கம் காணப்படுகிறது.
- இந்தியாவின் வாஸ்து கலை, இசை, ஓவியக்கலை போன்றவை பல நிலைகளில் பல்வேறு நடைகளின் வழி ஒன்றிணைந்து வளர்ச்சியடைந்ததாகும்.
- பக்தி, சூஃபி இயக்கங்கள் இந்தியாவில் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கும் காரணமாயின.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- இடைக்கால இந்தியாவிலுள்ள வாஸ்துகலை வடிவத்தின் தனித்தன்மைகள் எடுத்துரைக்கப்படுகிறது.
- இந்தோ- இஸ்லாமிய வாஸ்து கலை வடிவத்தின் தனித்தன்மைகளைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- இடைக்கால இந்தியாவில் இசையிலும் ஓவியக் கலையிலும் ஏற்பட்ட மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.

- இடைக்கால இந்தியாவில் வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கும் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் பக்தி, சூஃபி இயக்கங்கள் அளித்த பங்கை மதிப்பிடுகின்றனர்.

## மதிப்பிடலாம்

- இந்தோ- இஸ்லாமிய வாஸ்து கலைவடிவத்தின் தனித்தன்மைகளைக் கண்டறியவும்.
- இடைக்கால கட்டத்திலுள்ள சில கட்டிடங்களையும் அவை கட்டப்பட்ட ஆட்சிக்காலமும் அடங்கிய அட்டவணையை முழுமையாக்கவும்.

| கட்டிடங்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|
| பிரகதீஸ்வரர் கோவில் | சோழர் ஆட்சிக் காலம் |
| குத்துப்மினார் | ......................................... |
| ஹுமாயூனின் கல்லறை | ......................................... |
| தாஜ்மஹால் | ......................................... |
| செங்கோட்டை | ......................................... |

## தொடர் செயல்பாடுகள்

- இந்தியாவிலுள்ள பல்வேறு கட்டிடங்களோடு தொடர்புடைய வரலாற்றையும் சுவாரஸ்யமான நிகழ்வுகளையும் சேகரிக்கவும்.
- பக்தி- சூஃபி இயக்கத்திலுள்ள முக்கியமானவர்களின் படங்களைச் சேகரித்துக் குறிப்புகளோடு ஆல்பம் தயாரிக்கவும்.
- பக்தி இயக்கத்தின் செயல்பாடுகளுக்குத் தலைமை வகித்தவர்களுடையவும் அவர்களுடைய செயல்மண்டலங்கள் உட்பட்ட இன்றைய மாநிலங்களுடையவும் அட்டவணை தயாரிக்கவும்.
- மொகலாய ஓவியக் கலையோடு தொடர்புகொண்ட படங்களைச் சேகரித்து சுவர்பத்திரிக்கை தயாரிக்கவும்.

| சுய மதிப்பீடு | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| பல்வேறு காலத்திலுள்ள வளர்ச்சியின் பலனாகவே இந்தியாவில் வாஸ்து கலை உருவானது என்பதை அறிந்து கொள்ளமுடியும். | | | |
| இந்தோ- இஸ்லாமிய வாஸ்து கலைவடிவின் தனித்தன்மைகளை விவரிக்க முடியும். | | | |
| இடைக்கால இந்தியாவிலுள்ள வாஸ்து கலை, ஓவியம், இசை போன்ற மண்டலங்களிலுள்ள வளர்ச்சியை மதிப்பிட முடியும். | | | |
| இடைக்கால இந்தியாவிலுள்ள கட்டிடங்கள் இந்தியாவின் பாரம்பரிய அடையாளங்கள் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. | | | |
| பக்தி- சூஃபி இயக்கங்கள் இந்தியாவின் பண்பாட்டு மண்டலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்ய முடியும். | | | |



8

# இடைக்கால உலகம்

*காலம் C.E. ஐந்தாம் நூற்றாண்டு ஐரோப்பிய மக்கள் ஒவ் வொரு நாளையும் அச்சத்துடன் கழித்தனர். வடக்கு ஐரோப் பாவிலிருந்து ஜெர்மானிய வம்சத்தினரின் நிரந்தர மான ஆக்கிரமிப்பு தான் இவர்களது அச்சத்துக்குக் காரணமாக இருந்தது. இரைச்சலுடன் வந்த ஆக்கிரமிப்புக்காரர்கள் நக ரங்களைக் கொள்ளையடித்து மக்களைக் கூட்டமாகக் கொலை செய்தனர். மக்கள் தங்கள் கவலைகளை மன்னர்களிடம் முறையிட்ட போதும் மன்னர்களால் எதுவும் செய்ய இயலவில்லை.*


*இறுதியில் மன்னர்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். மக்களின் உடமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு வழங்குப வருக்கு நாட்டின் நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கப்படும் என அறிவித்தனர். தைரியசாலிகளும் போர்வீரர்களுமான ஏராளம் பிரபுக்கள் மக்களைக் காப்பாற்ற முன் வந்தனர். அவர்களுக்கு ஊதியமாகக் கிடைத்த நிலத்தை அவர்கள் தங்களோடு ஒத்துழைத்தவர்களுக்கும் தங்களுக்குச் சேவை செய்தவர்களுக்குமாகப் பகிர்ந்து அளித்தனர்.*

*இவ்வாறு நிலத்தைப் பெற்றவர்கள் அதே நிபந்தனையு டன் மற்று சிலருக்கு நிலத்தை வழங்கினர். இவ்வாறு வழங்கப்பட்ட நிலத்தில் விவசாயிகளை வைத்து இரவு பகலாக வேலை செய்தனர். விவசாயிகளின் வாழ்க்கை அடிமைகளின் வாழ்க்கையைப் போல மாறியது.*

C.E. ஐந்தாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான ஐரோப்பாவின் வரலாற்றைப் பற்றிய சில தகவல்களை வழங்கும் விபரங்கள் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது. இக்காலம் உலக வரலாற்றில் இடைக் காலம் என அறியப்படுகிறது. இடைக்கால இந்தியாவின் வரலாறு பற்றி முன் அலகுகளில் விவாதித்தோம் அல்லவா? இடைக்கால ஐரோப்பாவின் வரலாறு பற்றிய எந்தெந்த தகவல்களை மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரத் தொகுப்பிலிருந்து புரிந்து கொள்ளலாம்?

- ஐரோப்பிய மக்கள் நிரந்தரமாக ஆக்கிரமிப்புக்களை எதிர் கொண்டிருந்தனர்.
- ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கு முன்வந்த பிரபுக்களுக்கு மன்னர் நாட்டின் நிலங்களைப் பகிர்ந்தளித்தார்.
- 
- 

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வரைபடத்திலிருந்து இடைக்கால ஐரோப்பிய சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைப் புரிந்து கொள்ளலாம்.




இந்தச் சமூக வரிசையில் மிகவும் உயர்ந்த இடம் மன்னருக்கு வழங் கப்பட்டது. நாட்டின் மொத்த நிலங்களும் மன்னருக்கு உரிமைப்பட்ட தாகும். மன்னர் பல்வேறு பிரபுக்களுக்கு நிலம் வழங்கினார்.

இதற்குப் பதிலாகப் பிரப்புக்கள் மன்னருக்கு இராணுவச் சேவையை அளித்தனர். ஒவ்வொரு பிரபுவும் தமக்குக் கிடைத்த நிலத்தின் ஒரு

பகுதியை இடைநிலைப் பிரபுக்கள் என்னும் மற்றொரு பிரிவுக்கு வழங்கினர். அதற்குப் பதிலாகப் பிரபுக்கள் இடைநிலைப் பிரபுக்களிடமிருந்து சேவைகளை ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு நிலத்தின் உரிமையை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால ஐரோப்பாவில் உருவான சமூக அமைப்பை நிலமானிய முறை என அழைக்கின்றனர்.

நிலமானிய சமூகத்தின் மிகவும் கீழ்நிலையிலுள்ளவர்கள் விவசாயிகளாவார். சமூகத்தில் மிகவும் அதிகமான பிரிவினர்களும் அவர்களேயாவர். பிரபுக்களின் விவசாய நிலங்களிலும் வீடுகளிலும் வேலை செய்வதற்கு இவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

பிரபுக்களின் உடமையிலிருந்த பரந்த நிலப்பகுதிகளை மானர் (Manor) என அழைத்தனர். ஒவ்வொரு மானரிலும் விவசாய நிலத்தோடு மேய்ச்சல் நிலங்கள், பிரபுவின் பெரிய வீடு, ஆலைகள், விவசாயிகளின் குடில்கள் வழிபாட்டுத் தலங்கள் போன்றவை காணப்பட்டது.



**நிலமானிய முறை**

'பியூட்' என்ற ஜெர்மானியச் சொல்லிலிருந்து தான் ஃபியூடலிசம் என்ற வார்த்தை உருவானது. ஃபியூட் என்றால் ஒரு துண்டு 'நிலம் என்று பொருள்'



நிலமானிய சமூகத்தில் விவசாயிகளின் நிலையைப் பற்றி கலந்துரையாடல் நடத்தி குறிப்பு தயாரிக்கவும்.

## நகரங்கள், வாணிபம், வாணிபக் கூட்டமைப்புகள்

நிலமானிய முறையின் காலமாகிய இடைக்காலத்தில் ஆரம்பத்தில் வாணிபத்திற்கு அதிக முக்கியத்துவம் காணப்படவில்லை. மானர்களின் உற்பத்திப் பொருட்கள் அங்கேயே வினியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற்ற கண்காட்சியின் வாயிலாக உற்பத்திப் பொருட்களும் வேளாண் பொருட்களும் வினியோகம் செய்யப்பட்டது.

C.E. பதினாறாம் நூற்றாண்டுக் கால அளவில் ஐரோப்பாவில் பல்வேறு புதிய நகரங்கள் வளர்ச்சியடைந்தது. வாணிப முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் கைவினைப் பொருட்களின் வியாபார மையங்களும் நகரங்களாக மாறியது. துறைமுகங்களை மையமாகக் கொண்டும் சில நகரங்கள் தோன்றியது. ஆரம்ப காலத்தில் இத்தாலியில் தான் முதன் முதலாக நகரங்கள் தோன்றியது.ஆசிய நாடுகளோடும் மேற்கு ஐரோப்பிய நாடுகளோடும் இத்தாலிய நகரங்கள் வாணிபம் செய்திருந்தது .

KT 641-3/ Soc. Sci. (T)- 6 (Vol-2)

வெனிஸ், மிலான், ஃபிளோரன்ஸ், ஜெனீவா போன்றவை இத்தாலியின் முக்கியமான நகரங்களாகும். நூறம்பர்க், கான்ஸ்டான்டி நோபிள் போன் றவையும் அக்காலத்தின் முக்கிய நகரங்களாகும். இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வாசனைத் திரவியங்கள் ரத்தினங்கள் துணி வகைகள் போன்றவை பெரும்பாலும் இந்த நகரங்களுக்கே வந்து சேர்ந் தன.அங்கிருந்து இந்த உற்பத்திப் பொருட்கள் பிற ஐரோப்பிய நாடுக ளுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த பெரும்பாலான நகரங்களுக்கும் சொந்தமான ஆட்சியமைப்பு காணப்பட்டது. ஒவ்வொரு நகரமும் பெரிய சுற்றுச்சுவர்களால் பாதுகாக்கப்பட்டது. தூய்மையில் மிகவும் பின்தங்கியிருந்ததனால் இந்நகரங்களில் பிளேக் போன்ற கொடிய நோய்கள் பரவியது.




இடைக்கால இந்தியாவில் நகரங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை மதிப்பிடவும்.



### கறுப்பு மரணம்

*“ காலையில் உறவினர்களோடு சேர்ந்து காலைச் சிற்றுண்டி சாப்பிட்டு இரவு பரலோகத்தில் மூதாதையர்களுடன் இரவு உணவு அருந்த வேண்டி வந்த எத்தனையோ தைரியசாலிகளான ஆண்களும் அழகான பெண்களும்.... நோய்வாய்ப்பட்ட பல்லாயிரக்கணக்கானோர் கவனிப்பாரின்றி மடிந்து வீழ்கின்றனர். சிலர் வழியோரங்களில் உயிரிழந்த போது மற்று சிலர் தங்களது வீடுகளில் இறுதி மூச்சை இழந்தனர். அழுகிய சடலங்களிலி ருந்து எழும்பிய துர்நாற்றத்திலிருந்து தான் வீடுகளில் ஆட்கள் இறந்து கிடக்கும் தகவலைப் பிறர் அறிந்தனர். கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்ய இயலாமல் சடலங்கள் குவியல்களாகக் கிடந்தது”* பொக்காசியோ- தக்காமரன்

இடைக்கால நகரங்கள் எதிர்கொண்ட ஒரு பெரும் சவால்தான் பிளேக் என்ற நோய் பிளேக் நோய் தாக்கிய ஒரு நகரத்தைப் பற்றித் தான் பொக்காசியோ விவரித்துள்ளார். பிளேக் நோயால் பாதிக்கப்பட்டது பெரும்பாலும் துறைமுக நகரங்களாகும். கப்பல்களில் பொருள் களோடு வந்த எலிகள் இந்நோயைப் பரப்பியது. ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கக் காரணமாகிய பிளேக் நோய் அன்று கறுப்பு மரணம் (Black death) என அறியப்பட்டது. C.E. 1300 இல் 73 தசலட்சமாக இருந்த ஐரோப்பாவின் மக்கள்தொகை ஒரு நூற்றாண்டு கழிந்த போது 45 தசலட்சமாக குறைந்தது.




இடைக்கால ஐரோப்பிய நகரங்கள்

நிலப்படத்தை உற்றுநோக்கி இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த நகரங்கள் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தது எனக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

- 
- 
- 

ஐரோப்பாவில் புதிதாக வளர்ச்சியடைந்த நகரங்கள் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வாணிப மையங்களாக இருந்தது. இந்த நகரங்களின் வணிகர்களும் கைவினைக் கலைஞர்களும் 'கில்டுகள்' என்னும் சங்கத்தினைத் தோற்றுவித்தனர். வணிகர்களோடு இரும்பு வேலை செய்பவர், பொன் வேலை செய்பவர், தோல்பணியாளர்கள். தச்சு

வேலை செய்பவர்கள் போன்றோரும் கில்டுகளை உருவாக்கினர். பல் வேறு வகையான உற்பத்திப் பொருட்களின் விலை, தரம் தொழிலாளர் களின் வேலைநேரம் போன்றவற்றைக் கில்டுகள் நிர்ணயித்தது..



இடைக்கால ஐரோப்பாவின் பொருளாதார வாழ்க்கையில் கில்டுக ளின் முக்கியத்துவத்தை மதிப்பிடலாம்.

## இடைக்கால ஐரோப்பாவில் அறிவியலும் கலையும்

இடைக்கால ஐரோப்பாவில் அறிவியல் கலை போன்ற துறைகளில் எடுத்துக் கூறத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. கிறிஸ்தவ தேவாலயங் களும் துறவியர் மடங்களும் முக்கியமான கல்வி மையங்களாகத் திகழ்ந்தது. துறவியர் மடங்களோடு சேர்ந்து நூலகங்கள் காணப்பட்டது. அச்சுத்தொழில் இல்லாமலிருந்த அக்காலத்தில் பல நூற்களுக்கும் கையெழுத்துப் பிரதிகள் தயாரித்து துறவியர் மடங்களில் பாதுகாக்கப் பட்டிருந்தது.



கையெழுத்துப் பிரதிகள் தயாரித்தல் ( ஓவியரின் கற்பனையில்)

இடைக்காலத்தில் ஐரோப்பாவில் அனேக பல்கலைக் கழகங்கள் காணப் பட்டது. இப் பல்கலைக் கழகங்கள் அறிவியல் மையங்களாகத் திகழ்ந்தன. அட்டவணையை ஆய்வு செய்து அவை எவையெனக் கண்டுபிடிக்கவும்.

**பல்கலைக் கழகங்கள்**

| இத்தாலி | ஸ்பெயின் | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|---|
| பாவிய | பார்ம | பாரிஸ் | ஆக்ஸ்ஃபோர்டு |
| பாதுவ | கொர்தோவ | டுலோஸ் | கேம்பிரிட்ஜ் |

இடைக்காலத்தில் கட்டிய கிறிஸ்தவ தேவாலயங்கள் அக்கால வாஸ்து சிற்பக் கலையின் சாதனைகளுக்கு எடுத்துக்காட்டாகும். நுழைவாயில் களுக்குப் பரந்த அறைகளும் அக்காலத்தில் கட்டப்பட்டத் தேவால யங்களின் சிறப்பம்சங்களாகும். இது ரோமானஸ்க் முறை என அழைக் கப்பட்டது. C.E. பனிரண்டாம் நூற்றாண்டு காலத்தில் கோத்திக் முறை என்னும் புதிய ஒரு கட்டிட முறை தோன்றியது. கூர்மையான கோபு ரங்கள் இக்கலையின் சிறப்பம்சங்களாகும்.


ரோமானஸ்க் முறை


கோத்திக் முறை

## இடைக்கால சீனாவும் அரேபிய உலகமும்


இடைக்கால ஐரோப்பாவைப் பற்றி நாம் இதுவரை விவாதித்தோம். இடைக்காலத்தில் அறிவியல் மற்றும் கலையின் துறைகளில் குறிப் பிடத்தக்க நன்கொடைகளைச் சீனர்களும் அரேபியர்களும் வழங்கினர்.

அச்சுஇயந்திரம், வெடிமருந்து போன்றவை சீனர்களின் கண்டுபிடிப்புகளாகும். இதைச் சீனர்களிடமிருந்து தான் ஐரோப்பியர்கள் புரிந்து கொண்டனர். அச்சுக்கலை அறிவியலின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தது. கடற்பயணங்களின் போது திசையைப் புரிந்துகொள்வதற்குத் துணை புரியும் திசைகாட்டும் கருவியும் சீனர்களின் கண்டுபிடிப்பாகும். சீனர்கள் கட்டிடக் கலையிலும் தேர்ந்தவர்களாக இருந்தனர். ' பகோடகள்' என அழைக்கப்படுகின்ற புத்தக் கோயில்கள் அவர்களின் கட்டிடக் கலைக்குச் சான்றாகும்.


சீனா பகோட


பழங்கால அச்சு இயந்திரம்


அறிவியல்- தொழில்நுட்ப- கலைத்துறையில் இடைக்கால சீனாவின் சாதனைகள் பற்றிய சொற்சூரியனை நிரப்பவும்.




C.E.. ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தின் தோற்றத்தோடு அரேபியர்கள் ஒரு நாகரீகமான சமூகத்தினராக மாறினர். அறிவியல், இலக்கியத்துறைகளில் அவர்கள் முக்கியமான நன்கொடைகளை வழங்கினர். அல்ராஸி, இபின்ஸின போன்றவர்கள் மருத்துவத் துறையில் மேதைகளாக இருந்தனர். அல்ராஸி கித்தாம்புல் ஹவை என்ற மருத்துவ நூலை இயற்றினார். இபின்ஸின அல்- கானுன் என்னும் நூலை இயற்றினார்.


உமர்கயாம் இயற்றிய 'ருபாயத்' பிர்தௌஸியின் ஷாஹ்னாமா போன்றவை அக்காலத்தைய முக்கியமான இலக்கியப் படைப்புகளாகும். பிரபலமான ஆயிரத்து ஒர் இரவுகள் இயற்றப்பட்டதும் இக்காலத்திலாகும்.

பழங்கால இந்தியா அறிவியல் தொழில்நுட்பத் துறையில் அடைந்த பல சாதனைகளை அரேபியர்கள் புரிந்து கொண்டு அவர்கள் வாயிலாக அவை ஐரோப்பாவை அடைந்தது. எடுத்துக்காட்டாக பூஜ்யம், பின்ன முறை போன்றன.

அறிவியல் தொழில்நுட்பத் துறையில் அரேபியர்களின் நன்கொடைகளை உட்படுத்தி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படத்தை நிரப்பவும்.



இடைக்கால ஐரோப்பா, சீனா, அரேபிய உலகம் போன்றவைகளின் சில முக்கியமான சிறப்பம்சங்களைத் தான் நாம் இப்பாடப் பகுதியில் கலந்துரையாடினோம். இடைக்காலத்தின் இறுதியில் வாணிபம் வலுவடைந்து வாணிபத் தொடர்புகள் வாயிலாகக் கலாச்சார அறிவியல் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.






## தொகுப்பு

- இடைக்கால ஐரோப்பாவில் தோன்றிய சமூக– பொருளாதார அரசியல் முறையே நிலமானிய முறை
- நிலமானிய சமூக அமைப்பின் மிகவும் உயர்ந்த நிலையில் மன்னரும் கீழ்மட்டத்தில் விவசாயிகளும் காணப்பட்டனர்.
- C.E. பதினொன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏராளமான நகரங்கள் தோன்றியது.
- நகரங்களின் தோற்றத்திற்கு வாணிபத்தின் வளர்ச்சி ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.
- இடைக்காலத்திலுள்ள வணிகர்களுடையவும் கைவினைத் தொழிலாளர்களுடையவும் கூட்டமைப்பே கில்டுகள்.

- இடைக்கால ஐரோப்பாவில் ஏராளம் பல்கலைக்கழகங்கள் தோன்றியது.
- அறிவியல்- கலை இலக்கியத் துறைகளில் உலகக் கலாச்சாரத் திற்குச் சீனர்களும் அரேபியர்களும் சிறந்த நன்கொடைகளை வழங்கினர்.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- நிலமானிய முறையின் முக்கியமான சிறப்பம்சங்களை விவரிக்கின்றனர்.
- இடைக்காலத்தில் நகரங்கள் வளர்ச்சியடைவதற்கான காரணத்தை விளக்குகின்றனர்.
- இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த நகரங்களை அட்டவணை செய்கின்றனர்.
- கல்வித்துறையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்துகின்றனர்.
- இடைக்காலத்தில் சீனர்கள் மற்றும் அரேபியர்களின் கலாச்சார சாதனைகள் பற்றி புரிந்து கொள்கின்றனர்.



## மதிப்பிடலாம்

- நிலமானிய சமூகத்தின் பல்வேறு பிரிவுகள் எவை?
- நிலமானிய சமூகத்தில் விவசாயிகளின் நிலைமையை ஆய்வு செய்யவும்.
- இடைக்காலத்தில் நகரங்கள் வளர்ச்சியடைந்ததில் வாணிபத்தின் பங்கினைப் பகுப்பாய்வு செய்க.
- இடைக்காலத்தில் கட்டப்பட்ட தேவாலயங்களின் முக்கியமான சிறப்பம்சங்கள் யாவை?
- அறிவியல்- இலக்கியத் துறையில் அரேபியர்களின் சாதனைகளை விவரிக்கவும்.

- அறிவியல் தொழில்நுட்பத்துறையில் சீனர்களின் நன்கொடைகளைப் பற்றிக் குறிப்பு தயாரிக்கவும்
- A பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளவற்றுடன் பொருத்தமானதை B பிரிவிலிருந்து கண்டுபிடித்து எழுதவும்.

| A | B |
|---|---|
| இத்தாலி | கொர்தோவ |
| சீனா | ஷாஹ்னாமா |
| ஸ்பெயின் | ஜனோவ |
| அல்ராஸி | அச்சுக்கலை |
| ஃபிர் தௌஸி | கித்தாம்புல் ஹவை |

## தொடர் செயல்பாடுகள்

- நிலமானிய சமூக அமைப்பின் பல்வேறு பிரிவினர்களையும் அவர்களின் தனித்தன்மைகளையும் குறிப்பிடுகின்ற சார்ட் தயாரித்து சமூக அறிவியல் கூடத்தில் வெளியிடவும்.
- உலகப்படத்தில் இடைக்கால நகரங்களில் வளர்ச்சியடைந்த நாடுகளைக் கண்டுபிடித்து வண்ணம் தீட்டவும்.
- உங்களது நூலகத்திலிருந்து ஆயிரத்து ஓர் இரவுகள் சேகரித்து வாசிக்கவும்.

## சுய மதிப்பீடு

| | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| நிலமானிய சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைப் பிரித்தறிய இயலும். | | | |
| நிலமானிய முறையில் விவசாயிகளின் பரிதாப நிலையைப் பகுப்பாய்வு செய்ய இயலும் | | | |
| இடைக்காலத்தில் வளர்ச்சியடைந்த பல்கலைக் கழகங்களை அட்டவணைப்படுத்த இயலும். | | | |
| அறிவியல்-இலக்கியத் துறையில் அரேபியர்கள் மற்றும் சீனர்களின் சாதனைகளை மதிப்பிட இயலும். | | | |



9

# இடைக்காலக் கேரளம்

இடைக்கால இந்தியாவின் வரலாற்றை நாம் முன் அலகுகளில் ஆய்வு செய்தோமல்லாவா? இக்கால அளவில் கேரளாவிலுள்ள மக்கள் வாழ்க்கை எவ்வாறு காணப்பட்டது. C.E.ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான இடைக்கால கேரளத்தைப் பற்றிய அறிவு வழங்கும் முக்கிய சான்றுகளே செப்பேடுகள். அத்தகைய செப்பேடுகளில் ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



யூதர்களின் செப்பேடு

### செப்பேடுகள்

செம்புத் தகடுகளில் பொறித்து வைத்திருக்கும் எழுத்துக்கள் செப்பேடுகள் எனப்படுகிறது. நாடுவாழிகள் கோயில்களுக்கும் வணிகச் சங்கங்களுக்கும் வழங்கிய அதிகாரச் சான்றுகள் பெரும்பாலும் செப்பேடுகளிலாகும்.(எ.கா) தெரிசாப்பள்ளிச் செப்பேடு, யூதச்செப்பேடு, சில செப்பேடுகளில் நாடுவாழிகளின் வருடம் குறிப்பிடப் பட்டிருந்தது

இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்துக்கள் உங்களுக்குத் தெரிந்த எழுத்துக்களா? வட்டெழுத்து என்னும் பழங்கால எழுத்து வடிவில் தான் இது எழுதப்பட்டுள்ளது. மகோதயபுரம் என்ற தேசத்தின் ஆட்சியாளராக இருந்த பாஸ்கர ரவி அஞ்சு வண்ணம் என்ற வாணிபச் சங்கத்திற்கு வழங்கிய உரிமைகளைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகோதயபுரம் எங்கு இடம் பெற்றிருந்தது?

செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆட்சிக் காலமும் ஆட்சி அதிகாரிகளும் யாராக இருந்தனர்? நமக்குத் தேடி கண்டுபிடிக்கலாம்.

## பெருமாள்கள்

கேரளம் உட்பட்ட பழங்காலத் தமிழகத்தில் மூவேந்தர்கள் என அழைக்கப்பட்டக் கோத்திரத் தலைவர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தது. சி.இ. ஒன்பதாம் நூற்றாண்டு காலத்தில் மகோதயபுரத்தை மையமாகக் கொண்டு மன்னராட்சி ஆரம்பித்தது. இவர்கள் பெருமாள்கள் என அறியப்பட்டனர். தற்போதைய கொடுங்கல்லூரும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளும் மகோதயபுரம் என அழைக்கப்பட்டிருந்தது. பெருமாள்களின் ஆட்சியோடு கேரளம் ஒரு ஆட்சிப் பகுதியாக வளர்ச்சியடைந்தது. கேரளத்தை ஆட்சி புரிந்த பெருமாள்கள் சேரன், சேரமான் போன்ற பெயர்களிலும் அறியப்பட்டிருந்தனர். சில ஆட்சியாளர்கள் குலசேகரன் என்ற பட்டப் பெயரை ஏற்றுக்கொண்டனர்.

தற்போதைய கேரளத்தின் பெரும்பான்மையான பகுதிகளை உட்படுத்திய ஆட்சியாகப் பெருமாள்களின் ஆட்சி காணப்பட்டது.

- பெருமாள்கள் ஆட்சிகாலத்தில் எந்தெந்த பகுதிகளில் அவர்களுடைய ஆட்சிப் பரவியிருந்தது என நிலப்படத்தைப் பாருங்கள். அவர்களுடைய ஆட்சி பரவியிருந்த நாடுகளை அட்டவணைப்படுத்தி எழுதவும்.

பெருமாள் காலத்து நாடுகள்
**C.E. 800 - C.E. 1122**




வடக்கு கோலத்து நாடு முதல் தெற்கு வேணாடு வரை பெருமாள்களின் ஆட்சி பரவியிருந்ததைக் காணலாம்.

பெருமாள்களுடைய சமூகப் பொருளாதார நிலைமையின் சிறப்பம்சங் களைக் கவனிக்கவும்.

- நீர் வசதியுள்ள பகுதிகளில் வேளாண்மைப் பரவியது.
- வேளாண் கிராமங்களில் பிரமாணர்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டினர்.
- கோயில்கள் அதிகார மையங்களாக வளர்ச்சியடைந்தது.

- விவசாய நிலங்களின் உரிமை பிராமணர்களுக்கு உரியது.
- நிலத்தில் நேரடியாக உழைத்தவர்கள் ஆளடியன்மார் ஆவர்.


கிராமங்களில் வேளாண்மையோடு பிற தொழில்களின் கூட்டமைப்புகளும் காணப்பட்டது. விவசாயம் வளர்ந்ததோடு நாடுகள் தோன்றியது. இந்த நாடுகளை ஆட்சி செய்தவர்கள் நாடுவாழிகள் என அழைக்கப்பட்டனர்.

## நாடுவாழி சொரூபங்கள்

பன்னிரண்டாம் நூற்றாண்டுடன் பெருமாள்களின் ஆட்சி வலுவிழக்கத் தொடங்கியது. அத்துடன் பெருமாள்களின் கீழ் ஆட்சிபுரிந்திருந்த நாடு வாழிகள் அந்தந்த நாடுகளில் சுயமாக ஆட்சியை ஆரம்பித்தனர். இது பெருமாள் காலத்திலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது.

- நாடுகளுக்கிடையே செல்வத்திலும் இராணுவசக்தியிலும் வேறு பாடுகள் காணப்பட்டன.
- பிராமணர்களின் அதிகாரம் பெருகியது.
- நாடுவாழி ஆட்சிப்பகுதிகள் சொரூபங்கள் என அறியப்பட்டன.
- அதிகாரத்திற்காக நாடுவாழிகள் தம்முள் சண்டையிட்டனர்.

ஒவ்வொரு சொரூபமும் கூட்டுக்குடும்பங்களாக இருந்தது. நாட்டின் ஆட்சி அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குடும்பத்தின் மூத்த உறுப்பினர் ஆட்சியைக் கையாண்டார். வேணாட்டை ஆட்சிபுரிந்த திருப்பாபூர் சொரூபம் கோழிக்கோட்டை ஆட்சிபுரிந்த நெடியிருப்பு சொரூபம் சிறக்கலை ஆட்சிபுரிந்த கோல சொரூபம் போன்றவை முக்கியமான சொரூபங்களாகும்.



## வாணிபம்

இடைக்காலக் கேரளத்தில் பிற நாடுகளோடுள்ள வாணிபமும் உள் நாட்டு வாணிபமும் முன்னேற்றம் அடைந்திருந்தது.

- நமது தேசத்திலிருந்து எந்தெந்த பொருட்கள் கைமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம்.

| | |
|---|---|
| • ஏலம் | • இஞ்சி |
| • | • |

இதைப் போன்று பிறநாட்டு உற்பத்திப் பொருட்களும் இங்குள்ள சந்தைகளில் வந்திருக்குமல்லவா? அவை எவையென பாருங்கள்.

- களிமண் பாத்திரங்கள்
- மீன் வலைகள்
- பட்டு

ஆரம்பக் காலத்தில் வாணிபத்தில் பொருட்களுக்குப் பதிலாகப் பொருட் களைப் பரிமாற்றம் செய்யும் முறை நிலவியிருந்தது. பின்னர் நாணயம் கொடுத்து பொருட்களை வாங்கினர். அஞ்சுவண்ணம் மணி கிராமம் போன்ற பெயர்களில் அன்று வாணிபச் சங்கங்கள் காணப்பட்டது. முன்னர் குறிப்பிட்ட யூதச் செப்பேடுகளில் இவற்றைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. வாணிபத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட பெருமாள்கள் வாணிபச் சங்கங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தனர். வாணிபச் சங்கம் மன்னரின் முக்கியமான வருமானமாக இருந்ததது.



**அஞ்சுவண்ணமும், மணிகிராமமும்**

சி. இ. 9 முதல் 13–ஆம் நூற்றாண்டு வரை வாணிபம் செய்த சங்கங் களே இவை. கேரளாவின் கடற்கரை நகரங்கள் இவர்க ளுடைய முக்கியமான வியாபார மையங்களாக இருந்தது.

## அங்காடிகள்

இது கடல் வாணிபம் முன்னேற்றமடைந்த காலமாக இருந்தது. அதோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தேவை அதிகரித்தது. நாட்டின் உட்பகுதிகளில் இத்தகைய உற்பத்திப் பொருட்களுக்கான வேளாண்மை பெருகியது. கிராமங்களில் உற்பத்தி

பொருட்களை அங்காடிகளுக்குக் கொண்டு வந்து பரிமாற்றம் செய்தனர். அங்காடிகளின் வளர்ச்சிக்கு உள்நாட்டு வாணிபம் துணை புரிந்தது.



அனந்தபுரம் கொல்லம், கொச்சி, கோழிக்கோடு, பந்தலாயினி போன்றவையே முக்கியமான அங்காடிகளாகும். கொல்லம், கொச்சி, கோழிக்கோடு வளப்பட்டணம் போன்றவை முக்கியமான துறைமுகங்களாகும்.

- கேரளாவின் நிலப்படத்தில் மேற்கூறப்பட்ட துறைமுகங்கள் எங்கு அமைந்துள்ளன எனக் கண்டுபிடிக்கவும்.

கரை வழியாகவும், கடல்வழியாகவும் அங்காடிகளில் வந்தடையும் உற்பத்திப் பொருட்கள் எவை? மணிப்பிரவாள இலக்கியப் படைப்பான உண்ணுநீலி சந்தேசத்தில் விவரித்துள்ளதைப் பாருங்கள்

**மணிப்பிரவாளம்**

வடமொழியும் பழைய மலையாளமும் சேர்ந்து ஒரு மொழி நடை உருவானது. மணிப்பிரவாள நடை என அது அறியப்பட்டது. அனேகமான படைப்புகள் இம்மொழி நடையில் படைக்கப்பட்டன.

*தட்டம் கட்டில் கயிறுவலை கைகட்டில் மஞ்சட்டிக் கொட்டம்.*
*மொட்டும் முட்டில் கரயும் அரியும் பெட்டியும் பட்டுநூலும்*
*ஆடும் சாடும் குடயுடேயும் பஞ்ஞியும் முஞ்ஞிவேரும்*
*நூறும் சோறும் சுறயுமறயும் காரிரும்புக் கரிம்பும்*

- அங்காடியிலிருந்து எந்தெந்த பொருட்கள் கிடைக்கிறது. அட்டவணைப்படுத்துங்கள்.
- அவை இன்றும் உங்களது பகுதியில் காணப்படுகிறதா? மேலே கொடுக்கப்பட்டுள்ள வரிகளைப் பரிசோதிக்கவும்.

முந்தைய அலகில் பல பயன்களும் வாணிபத்தைப் பற்றி விளக்கிக் கூறியதை நினைவு கூர்வீர்களால்லவா?

பதினைந்தாம் நூற்றாண்டில் கேரளத்தில் வந்த மஹ்வான் என்ற சீன யாத்திரிகர் கோழிக்கோடு துறைமுகத்தையும் அங்குள்ள வாணிபத்தையும் பற்றி விவரித்திருப்பதைப் பாருங்கள்.

"சீனாவிலிருந்து ஒரு கப்பல் வரும்போது மன்னரின் பிரதிநிதியான ஷாபந்தர் கோயயும் ஒரு தூதனும் கப்பலுக்கு வருவார்கள். கப்பலில் பொருட்களின் பட்டியல் தயாரித்து பொருட்களின் விலையை நிர்ணயிக்க ஒரு நாளைத் தேர்ந்தெடுப்பர். முதலில் பட்டுத்துணிகள் விலையை நிர்ணயித்த பிறகு உறுதிமொழி எடுப்பார்கள். உங்களது பொருட்களின் விலை இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எந்தக் காரணத்தாலும் அதில் இனி மாற்றம் வருத்தக்கூடாது"

இவ்வாறு தூதர்கள் எடுக்கின்ற உறுதிமொழிக்குச் சமமான மதிப்புள்ள பொருட்களே கைமாற்றம் செய்யப்பட்டிருந்தது.



மஹ்வானின் விவரணத்திலிருந்து கோழிக்கோட்டின் வாணிபத்தைப் பற்றி எந்தெந்த தகவல்கள் கிடைக்கிறது? குறிப்பு தயாரிக்கவும்

## மொழி, இலக்கியம், கலை

உண்ணுநீலி சந்தேசத்தின் சில வரிகளை நீங்கள் வாசித்தீர்களல்லவா? இந்த மொழியும் இலக்கியமும் எப்போது தோன்றியது? கேரளாவில் பழங்கால முதல் மலையாள மொழி இருந்திருக்கிறதா?

- கேரளாவை மலையாள தேசம் என அழைப்பார்கள். இப்பெயர் எதனால் வந்தது? கலந்துரையாடலாமா?

மலையாள மொழி தமிழிலிருந்து தோன்றியது எனக் கருதப்படுகிறது. வடமொழியும் மலையாளத்தில் தாக்கம் செலுத்தியிருக்கிறது. வட்டெழுத்து கோலெழுத்து போன்ற எழுத்து முறைகளில் தான் பழைய மலையாள மொழி எழுதப்பட்டுள்ளது. வட்டெழுத்தில் எழுதப்பட்ட யூதச் செப்பேட்டைப் பார்த்தது நினைவு கூர்கிறீர்களா?

KT 641-4/ Soc. Sci. (T)- 6 (Vol-2)

செறுசேரி இயற்றிய கிருஷ்ண காதாவும் எழுத்தச்சனின் ராமாயணம், மகா பாரதம் கிளிப்பாட்டுகளும், குஞ்ஞன் நம்பியாரின் குஞ்ஞன் இலக்கியப் படைப்புகளும் மலையாள மொழியின் வளர்ச்சிக்கு வழிகோலியது

பதினேழாம் நூற்றாண்டில் குவாசி முகம்மது அரபி மலையாளத்தில் இயற்றிய மொகியுதீன் மாலையும் பதினெட்டாம் நூற்றாண்டில் அர்ணோசு பாதிரியார் இயற்றிய புத்தன் பானயும் மலையாள மொழியின் முன்னேற்றத்திற்கு துணைபுரிந்தது. இவை தவிர வடக்கன் பாட்டுகள், தெக்கன் பாட்டுகள், தொழில் பாட்டு, நாடன் பாட்டு போன்றவையும் மக்களில் தாக்கம் செலுத்தியது.

**அரபிமலையாளம்**

கேரள முஸ்லீம்களிடையே வழக்கமாகக் காணப்பட்ட ஒரு கலப்புமொழியே அரபி மலையாளம் ஆகும். மலையாள மொழியை அரேபிய எழுத்துமுறையில் எழுதப்பட்டது.

பல்வேறு வகையான பாடல்களின் வரிகளைச் சேகரிக்கலாம் அல்லவா? வகுப்பில் வெளியிடலாமல்லவா?



- மேற் கொடுக்கப்பட்டுள்ள கலைவடிவங்களைக் கவனியுங்கள். அவை எந்தெந்தக் கலைவடிவங்கள் எனக்கூறமுடியுமா?

இடைக்காலக் கேரளத்தில் வளர்ச்சியடைந்த சில கலைவடிவங்கள் தான் இவைகள். கோயில்களை மையமாகக் கொண்டு நாட்டியம், சங்கீதம் போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன.

கூத்து, கூடியாட்டம், கதைகளி போன்ற கலைகள் கோயில்களோடு சேர்ந்து காணப்பட்ட கூத்தம்பலங்களில் அரங்கேறியது. இவை கோயில்

கலைகளாக அறியப்பட்டன. காவுகளிலும் மற்று வழிபாட்டுத் தலங்களிலும் நடத்தப்படுகின்ற தெய்யம், திறை, களம்பாட்டு போன்றவை சம்பிரதாயக் கலைகளாகும். கோயில்கலைகளைப் பொறுத்த வரையில் சம்பிரதாயக் கலைகள் மக்களிடையே பிரபலமானதாகும்.

- கோயில்களில் கலைகள் அரங்கேறும் அரங்கம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
- சம்பிரதாயக் கலைகள் மக்களிடையே பிரபலமடைந்தது எனக் கூறப்படுவது எதனால்?

இவை தவிர பல்வேறு மதப்பிரிவினர் சடங்குகள் மற்றும் கொண்டாட்டங்களின் பகுதியாக நடத்திய பல கலைகளும் காணப்பட்டன. ஒப்பனை, மார்க்கம்களி, சவிட்டு நாடகம் போன்றவை இதற்கு உதாரணமாகும்

## அறிவியல்

அறிவியல் துறையில் இடைக்கால கேரளம் சிறந்த வளர்ச்சி அடைந்திருந்தது. பெருமாள் காலத்தின் சிறந்த வானவியல் வல்லுனரே சங்கர நாராயணன். இவர் எழுதிய வானநூல் சங்கரநாராயணீயம் ஆகும். கணிதவியல் துறையில் மாதவாச்சாரியார் அளித்த நன்கொடைகள் உலகப் புகழ் பெற்றவையாகும். ஆயர்வேத நூலாகிய அஷ்டாங்க ஹிருதயமும் அக்காலத்தில் எழுதப்பட்டதாகும். வரலாற்று இலக்கியங்களான முஷக வம்சமும், துகபத்துல் முஜாஹிதீனும் இடைக்காலத்தின் படைப்புகளாகும்.

அக்காலத்தைய கல்விமையங்கள் சாலைகள் என அறியப்பட்டது. இவை கோவில்களோடு சேர்ந்து செயல்பட்டிருந்தது.புத்தமத மையங்களோடு சேர்ந்து காணப்பட்ட கல்விக்கூடங்கள் பள்ளிகள் என அழைக்கப்பட்டன.



**சாலைகள்**

கேரளாவின் ஆரம்பக் கால கட்டக் கல்வி மையங்களே சாலைகள் என அழைக்கப்பட்டது. இவை வழிபாட்டுத் தலங்களோடு சேர்ந்து காணப்பட்டது. காந்தளூர் சாலை, விழிஞ்ஞம் சாலை பார்த்திப சேகரபுரம் சாலை போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.



அறிவியல் துறையில் இடைக்கால கேரளத்தின் நன்கொடைகளை உட்படுத்தி படத்தை நிரப்பவும்




பதினெட்டாம் நூற்றாண்டுடன் வேறுபாடான, பொருளாதாரச் சமூக ஒழுங்குகள் கேரளத்தில் தோன்றியது. மேலும் கேரளத்தின் , கலை மொழி, அறிவியல் போன்றவையும் அதற்கான உருவத்தைப் பெற்றது

## தொகுப்பு

- இடைக்காலக் கேரளத்தைப் பற்றிய தகவல்களை அளிக்கும் முக்கியமான சான்றுகளில் ஒன்று செப்பேடுகளாகும்.
- பெருமாள்களின் ஆட்சிக்காலத்தில் தான் கேரளம் ஒரு தனி ஆட்சிப் பகுதியாக வளர்ச்சியடைந்தது.
- வேளாண்மையும் வாணிபமும் பெருமாள்களின் காலத்தினுடைய செல்வத்திற்கு அடிப்படையானது.
- பெருமாள்களின் ஆட்சி நலிவடைந்ததும் நாடுவாழிகள் ஆட்சியைக் கைப்பற்றினர்.
- நாடுவாழி ஆட்சி மையங்கள் சொரூபங்கள் என அறியப்பட்டன.

- உள்நாட்டு- வெளிநாட்டு வாணிபம் வலுவடைந்து புதிய அங்காடிகளும் துறைமுகங்களும் வளர்ச்சியடைந்தது.
- மலையாள மொழி வளர்ச்சியடைந்தது.
- இலக்கியம், கலை, அறிவியல் போன்ற துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- இடைக்காலக் கேரளத்தைப் பற்றிய தகவல்களை வழங்கும் முக்கியமான சான்றுகள் செப்பேடுகள் எனப் புரிந்து கொண்டு விளக்கிக் கூறுகின்றனர்.
- பெருமாள்களின் ஆட்சி கேரளத்தை ஒரு தனிப்பகுதியாக வளர்த்தியது எனக் கண்டுபிடித்து விளக்குகின்றனர்.
- உள்நாட்டு, துறைமுக வாணிபத்தின் வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்கின்றனர்.
- மலையாள மொழி, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளின் முன்னேற்றம் பற்றி விளக்குகின்றனர்.
- கேரளக்கலைகளைப் புரிந்து கொண்டு அவற்றை ரசிப்பதற்கான மனநிலையை அடைகின்றனர்.



## மதிப்பிடலாம்

- பெருமாள் காலத்தின் அதிகார அமைப்பைப் பற்றிக் குறிப்பு தயாரிக்கின்றனர்.
- கேரளாவின் கிராமங்களின் வளர்ச்சியும் வேளாண்மையின் பரவலும் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது- கலந்துரையாடல்.
- இடைக்கால கேரளத்தின் உள்நாட்டு- துறைமுக வாணிபத்தைப் பற்றி குறிப்பு தயாரிக்கவும்.
- கேரளாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பொருட்களின் பட்டியல் தயாரிக்கவும்.

- மலையாள மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரைத் தயாரிக்கவும்.
- அறிவியல் துறையில் இடைக்கால கேரளம் அடைந்த சாதனைகளைப் பற்றி ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

## தொடர் செயல்பாடுகள்

- கேரளாவில் காணப்பட்ட பாட்டு இலக்கியங்களின் வரிகளைச் சேகரித்து வகுப்பில் குழுக்களாக வெளியிடவும்.
- கேரளக் கலையின் படங்களைச் சேகரித்து படத்தொகுப்பு தயாரிக்கவும்.

## சுயமதிப்பீடு

| | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| பெருமாள்களின் ஆட்சிக் காலத்தில் கேரளம் ஒரு தனி ஆட்சிப்பகுதியாக வளர்ந்தது என்ற கருத்தை அடைந்தனர். | | | |
| இடைக்காலக் கேரளத்தின் வேளாண்மை, வியா பாரம் வாணிபம் போன்றவற்றின் முன்னேற்றத் தைப் புரிந்து கொள்ள முடிந்தது. | | | |
| பெருமாள்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சொரூபங்களும் நாடுவாழிகளும் அதிகாரத் தைக் கைப்பற்றியதை மதிப்பிட இயலும். | | | |
| இடைக்காலத்தில் அங்காடிகளும் துறைமுகங் களும் வளர்ச்சியடைந்த சூழ்நிலையைப் பகுப் பாய்வு செய்யலாம் | | | |
| | | | |

10



# மக்களாட்சியும் உரிமைகளும்

*நாட்டின் அனைத்து அதிகார வர்க்கத்திற்கும் எதிராக என்னுடைய பேச்சும் செயல்பாடுகளும் இருந்தன. சுதந்திரம், மக்களாட்சி,ஒருமித்த வளர்ச்சி மற்றும் சமத்துவம் நிறைந்த ஒரு அரசாங்கத்திற்காக நான் போராடுகிறேன். இதைப் போராடிப் பெற்றுக்கொள்வதே எனது இலட்சியம். மக்களாட்சிக் கொள்கையில் நீங்களும் நாங்களும் சமமானவர்களே. அவ்வாறு ஒரு சமத்துவ அமைப்பை உருவாக்குவதற்கு நீங்கள் பயப்படுகிறீர்கள்.*

**நெல்சன் மண்டேலா**

தென் ஆப்பிரிக்காவில் நடைபெற்ற மக்களாட்சிக்கு எதிரான ஆட்சியை அகற்றுவதற்குப் போராட்டம் நடத்திய நெல்சன் மண்டேலாவின் கூற்றை வாசித்தீர்கள் அல்லவா? எத்தகைய ஆட்சி முறைக்காக மண்டேலா போராடினார்? அனைத்து



### நெல்சன் மண்டேலா



தென் ஆப்பிரிக்காவில் டிரான்ஸ்கோயி எனும் கிராமத்தில் கஸோஸா கோத்திர இனத்தில் 1918 ஜூலை 18 ஆம் தேதி பிறந்தார். தென்ஆப்பிரிக்காவில் 80% க்கும் அதிகமாக உள்ள நீக்ரோக்களின் (கறுப்பு இனத்தவர்) உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் போராடினார். ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் முன்னணிப் போராளியாக அவர் இருந்தார். தேசதுரோகக் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப் பட்ட அவர் 21 வருடங்களும் 7 மாதங்களும் 10 நாட்களும் சிறையில் இருந்தார். 1990 பிப்ரவரி 11 ஆம் நாள் விடுதலையான அவர் 1994 மே 10 ஆம் நாள் தென்ஆப்பிரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆனார். 2013 டிசம்பர் 5 ஆம் நாள் தனது 95 வது வயதில் மரணமடைந்தார்.

மக்களையும் சமமாகக் கருதும் மக்களாட்சி முறையை அவர் கனவு கண்டார். மக்களாட்சி என்றால் என்ன என்பதை முன் வகுப்புகளில் படித்திருக்கிறீர்களல்லவா? மக்களாட்சிக்கு எதிரான அரசுகள் எங்கெல்லாம் நடைபெற்றதோ அங்கெல்லாம் மக்கள் போராட்டங்கள் நடத்தினர் என்று வரலாறு நமக்குக் கூறுகிறது. மக்களாட்சி முறைக்காக நடந்த போராட்டங்களில் நமது கவனத்தைக் ஈர்க்கும் ஓர் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது. கூடுதல் உதாரணங்களைக் கண்டறிந்து பட்டியலிடுக.

- இந்தியாவின் சுதந்திரப் போராட்டம்
- 
- 
- 

மக்களாட்சி முறைக்குப் பெரிய அளவில் வரவேற்பு கிடைக்கும் போதும் பல்வேறு நாடுகளில் மக்களாட்சி முறை அல்லாத அரசுகளும் நடைபெறுகின்றன. எத்தகைய சிறப்புத் தன்மைகள் மக்களாட்சி முறையைப் பிற அரசுமுறைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. உலகில் என்னென்ன ஆட்சிமுறைகள் நடைமுறையில் உள்ளன? தரப்பட்டுள்ள தலைப்புச் செய்திகளை உற்றுநோக்குங்கள்.




செய்திகளில் தரப்பட்டுள்ள நாடுகளையும் அவற்றில் நடைபெறும் ஆட்சிமுறைகளையும் நாம் கீழே தரப்பட்டுள்ள முறையில் பிரிக்கலாம்.

| நாடுகள் | அரசு |
|---|---|
| பூட்டான் | மன்னர் ஆட்சி |
| இந்தியா | மக்களாட்சி |
| புருனே | சுல்த்தான் ஆட்சி |
| மியான்மர் | இராணுவ ஆட்சி |



மேலும் பல நாடுகளும் அவைகளின் அரசுகளையும் கண்டறிந்து அட்டவணைப்படுத்தவும்.

தரப்பட்டுள்ள அரசுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகள் எவை? பூட்டான் மன்னரும் புருனே சுல்த்தானும் வாரிசு முறை அடிப் படையில் அதிகாரத்திற்கு வருகிறார்கள். இதை மக்களாட்சியல்லாத அரசுகள் எனக்கூறலாம். இராணுவ ஆட்சியும் மக்களாட்சியல்லாத அரசுமுறையில் உட்படுகிறது. இந்தியாவில் மக்களாட்சி முறை நடைமுறையிலுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொண்டீர்கள் அல்லவா. மக்கள் பிரதிநிதிகள் நடத்தும் ஆட்சியை மக்களாட்சி அரசு எனக்கூறலாம். மக்களாட்சி அரசுகள், மக்களாட்சியல்லாத அரசுகளின் சிறப்புத் தன்மைகளைத் தரப்பட்டுள்ள விளக்கப்படத்திலிருந்து புரிந்து கொள்ளலாம்.

**அரசு**

| மக்களாட்சி அரசு | மக்களாட்சியல்லாத அரசு |
|---|---|
| மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்<br>மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி | அதிகாரம் பரம்பரையாக வருகிறது.<br>வாரிசுமுறையோ, ஆக்கிரமித்தல் முறையோ |
| மக்களுக்குக் கருத்து சுதந்திரமும் உரிமைகளும் சட்டபூர்வமாக அளிக்கப்பட்டுள்ளது | மக்களுக்குக் கருத்து சுதந்திரமும் உரிமைகளும் குறைவாகும். |
| அரசு அதிகாரிகள் சட்டப்படி செயல்படுகிறார்கள். | அரசு அதிகாரி சட்டத்திற்கு அப்பாற்பட்டவர். காரணம் அவர் கூறுவதே சட்டம். |



மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளின் தனிச் சிறப்புகளை ஒப்புமைப்படுத்தி குறிப்பு தயார் செய்க.

மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளின் தனிச் சிறப்புகளைப் பற்றி தெரிந்து கொண்டீர்களல்லவா? உலகில் பெரும் பான்மையான நாடுகளிலும் மக்களாட்சி அரசே நடைமுறையில் உள்ளது. காரணம் பிற அரசு முறைகளை விட மக்களாட்சி முறையில் காணப்படும் சிறப்புகளாகும்.

## மக்களாட்சி அரசுகளின் சிறப்புகள்

- மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிக்கிறது.
- தனிநபர் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது.
- சட்டத்தின் முன் ஆட்சியாளர்களும் மக்களும் சமம்.
- ஆட்சியாளர்கள் மக்களுக்குக் கடமைப்பட்டவர்கள்.



எத்தகைய ஆட்சி முறை உள்ள நாட்டில் வாழ நீங்கள் விரும்பு கிறீர்கள்? காரணத்தை விளக்குக.

மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளைப் பற்றித் தெரிந்து கொண்டீர்களல்லவா. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளைப் பரிசோதித்து மக்களாட்சியுடன் தொடர்புடையவற்றிற்கு நேராக ☑ அடையாள மும். மக்களாட்சி அல்லாத அரசுகளுடன் தொடர்புடையவற்றிற்கு நேராக ☒ அடையாளமும் குறிக்கவும்.

- குறிப்பிட்ட கால அளவில் தேர்தல் நடைபெறுதல் ☐
- பரம்பரை பரம்பரையாகத் தொடரும் ஆட்சி ☐
- மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி ☐
- மன்னர்/சுல்தான்/ இராணுவம் இவைகளின் ஆட்சி ☐
- தனிநபர் சுதந்திரம் நிலைநிறுத்தப்படுகிறது ☐
- நீதிமன்றங்களுக்குக் கட்டுப்பாடு ☐
- மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுகிறது ☐


மக்களாட்சி முறையை மக்களாட்சி முறை அல்லாத அரசுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கியமான காரணி, மக்களாட்சி உறுதி அளிக்

கும் உரிமைகளாகும். குடிமக்களுக்கு மக்களாட்சி ஒரு வாழ்க்கைமுறை என்ற நிலையை உருவாக்க வேண்டுமெனில் அடிப்படை உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

மக்களாட்சி நடைபெறும் இந்தியாவில் நமக்கு கிடைக்கும் சில உரிமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- உயிர் வாழ்வதற்கான உரிமை
- கல்வி உரிமை
- கருத்துச் சுதந்திரம்
- சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம்

இத்தகைய உரிமைகள் எல்லா நாடுகளிலும் மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மக்களாட்சி முறை நாடுகளில் மட்டும் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறது. தரப்பட்டுள்ள புகைப்படக் காட்சியை உற்றுநோக்கவும்.




சிறுவயது முதல் யுத்த பூமியில் வாழும் நிலை ஏற்பட்ட 16 வயது பாலஸ்தீன சிறுமியின் புகைப்படக் காட்சி மேலே தரப்பட்டுள்ளது. கனவுக்காணக் கூட முடியாத நிலையில் யுத்தமானது பரா பக்கரின் விருப்பங்கள் அனைத்தையும் அழித்தது. இதே போல் சுதந்திரம், சமாதானம், உரிமைகள் எனும் சொற்களின் பொருள் என்னவென்றே தெரியாமல் அனேக மக்கள் இவ்வுலகில் வாழுகின்றனர். உரிமை என்றால் என்ன? ஒரு குடிமகனுக்கு மேன்மையான வாழ்க்கை வாழ்வதற்கும், அவனது திறமையை வளர்ப்பதற்கு உதவும் சமூகம் மற்றும் அரசும் உறுதியளிக்கும் உரிமைக் கோட்பாடுகளே உரிமைகளாகும்.

உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எல்லா நாடுகளிலும் உள்ள அரசுகள் கடைபிடிப்பதுண்டு. ஒவ்வொரு நாட்டிலும் அரசியலமைப்புச் சட்டத்தில் உட்படுத்தி குடிமகனுக்கு உறுதியளிக்கும் உரிமைகளின் பட்டியல் உரிமைகளின் தொகுப்பாகும். இந்தியாவில் இத்தைகைய உரிமைகளின் தொகுப்பு அடிப்படை உரிமைகள் என அழைக்கப்படுகிறது.

## மனித உரிமைகள்




கொடுக்கப்பட்டுள்ள செய்தித் துணுக்குகளைப் பார்க்கவும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மீறல்களும் அவற்றைப் பாதுகாப்பதற்கு வேண்டிய முயற்சிகளும் நடக்கிறது. நவீனகாலத்தில் உரிமைகள் பொதுவாக மனித உரிமைகள் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது. மனித வர்க்கத்தில் ஒரு அங்கம் என்ற நிலையில் அனைவருக்கும் ஒரே விதமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் மனித உரிமைகள் எனப்படும். 1948 டிசம்பர் 10 ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்ட அகில உலக மனித உரிமை அறிக்கையில் உட்படுத்தப்பட்ட சில உரிமைகளைக் கூர்ந்து கவனியுங்கள்



### அகில உலக மனித உரிமை அறிக்கை

“ எல்லா மனிதர்களும் சுதந்திரமாய் பிறக்கிறார்கள். அதிகாரத்திலும் உரிமையிலும் சமமாயிருக்கிறார்கள். அவர்கள் அறிவு மற்றும் மனசாட்சியில் அருள் பெற்றவர்களும், ஒருவரோடொருவர் சகோதரத்துவம் வெளிப்படுத்தவும் கடமைப்பட்டவர்களாவர்’.

- உயிர்வாழ்வதற்கான உரிமை
- சுதந்திரத்திற்கான உரிமை
- சங்கம் அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம்
- தொழில் உரிமை
- கலாச்சாரம் மொழி மற்றும் எழுத்து முதலியவற்றைப் பாது காப்பதற்கான உரிமை.

மனித உரிமைகளைப் பாதுகாக்க இந்திய அரசு தேசிய அள வில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றில் முக்கியமானது தேசிய மனித உரிமை ஆணையம் மற்றும் மாநில மனித உரிமை ஆணையத்தையும் அமைத்தது.



உயிர் வாழ்வதற்கான உரிமை என்றால் கௌரவமான வாழ்க்கை என்பதாகும் அதன் பொருள்,சுத்தமான காற்று, சுத்த மான நீர் மற்றும், போதுமான அள விற்குச் சத்தான உணவு. இவை யெல்லாம் உயிர் வாழ்வதற்கான உரிமையின் பகுதியாகும்.



மனித உரிமை தினத்தைச் சிறப்பிக்கும் பள்ளிக்கூட காலைக்கூட்டத்தில் பேசுவதற்காக மனித உரிமைகள் என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு தயாரிக்கவும்.

## தேசிய மனித உரிமை ஆணையம்

மனித உரிமையைப் பாதுகாப்பதற்காகத் தேசிய அளவில் எடுக்கப்பட்ட முக்கியமான செயல்பாடுதான் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தோற்றம். 1993- இல் பாராளுமன்றம் அங்கீகரித்த மனித உரிமைப் பாது காப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் இவ்வாணையம் உருவாக்கப் பட்டது. தேசிய மனித உரிமை ஆணையத்தில் தலைவர் உட்பட 5 உறுப்பினர்கள் உண்டு. பணி ஓய்வு பெற்ற ஒரு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி இந்த ஆணையத்தின் தலைவராகச் செயல்படுகிறார்..



**தேசிய மனித உரிமை ஆணையத்தின் முதல் தலைவர்.**

### தேசிய மனித உரிமை ஆணையத்தின் கடமைகள்

மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய வழக்குகளின் மேல் விசாரணை நடத்துதல்.

சிறைச்சாலைப் போன்ற இடங்களைப் பார்வையிட்டு அங் குள்ளவர்களின் வாழ்க்கை வசதிகளை அறிந்து சிபாரிசு செய்தல்.

மனித உரிமைப் பாதுகாப்பிற்காகப் பயனுள்ள ஆலோ சனைகள் வழங்குதல்

மனித உரிமை அரங்கில் செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவித்தல்.

## மாநில மனித உரிமைப் பாதுகாப்பு ஆணையம்

எல்லா மாநிலங்களிலும் மாநில மனித உரிமைப் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. 1998 –இல் கேரள மாநில மனிதஉரிமைப் பாதுகாப்பு ஆணையம் செயல்படத் தொடங்கியது. ஒரு தலைவரும் இரண்டு உறுப்பினர்களும் கொண்டதாகும் மாநில மனித உரிமைப் பாதுகாப்பு ஆணையம். தேசிய மனித உரிமைப் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே கடமைகள் மாநில மனித உரிமைப் பாதுகாப்பு ஆணையத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மறுக்கப்பட்டால் இவ்வாணையத்தில் முறையிடலாம்.

## குழந்தைகளின் உரிமைகள்






குழந்தைகளின் உரிமைகள் மேலே தரப்பட்டுள்ளன. குழந்தைகளுக்குச் சிறப்பான உரிமைகள் தேவைப்படுவதன் காரணம் என்ன?குழந்தைகளின் உரிமைகள் எவை? குழந்தைப் பருவத்தின் உடல் அமைப்பு மற்றும் மனநிலைக்கு ஏற்ப அவர்களுக்கு சிறப்பு உரிமைகள் தேவை. எனவே குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

கல்வி குழந்தைகளின் முக்கிய உரிமையாகும். 2009– இல் பாராளுமன்றம் நடைமுறைப்படுத்திய கல்வி உரிமைச் சட்டம்(RTE)இதனை வலியுறுத்துகிறது. 6 முதல் 14 வயதுவரை உள்ள குழந்தைகளுக்குக்

கட்டாய இலவசக் கல்வி வலியுறுத்தப்படுகிறது. கல்விக்கு ஏற்றச்சூழல் மற்றும் அடிப்படை வசதிகள் குழந்தைகளின் உரிமையாகும்.

கல்வி கற்கும் உரிமை குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதைப் புரிந்துகொண்டீர்களல்லவா? பிற உரிமைகளை எழுதி பட்டியலை நிரப்புங்கள்.

- உயிர் வாழ்வதற்கும் பாதுகாப்பு மற்றும் முழுமையான வளர்ச்சிக்கும் உள்ள உரிமை.
- மனம் மற்றும் உடல் ரீதியான அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பும், நிவாரணமும் பெறும் உரிமை
-
-
-

**குழந்தைகளின் உரிமை உடன்படிக்கை**

"மனிதகுலம் பெற்றுள்ள எல்லா சிறப்புகளையும் குழந்தைகளுக்கு வழங்க கடமைப்பட்டுள்ளோம். உற்சாகமான ஒருவருக்கொருவர் புரிதலும் நிறைந்த அர்ப்பணச் சூழலில் குழந்தைகள் பாசத்தை அனுபவித்து வளரவும், சுதந்திரம், சமாதானம், சகிப்புத்தன்மை ,சமத்துவம், ஒருவருக்கொருவர் உதவி செய்தல் முதலான சிறப்புத் தன்மைகளின் முழு குணத்தையும் அனுபவித்து வளரவேண்டும்"






குழந்தைகளின் உரிமைச் சட்டங்கள் நடைமுறையிலிருக்கும் போதே அவர்கள் பல்வேறு வகைகளில் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்.

குழந்தைகளின் உரிமையைப் பாதுகாப்பதற்காக தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஏராளம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் முக்கியமானது தேசிய குழந்தை உரிமை ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமை ஆணையமும் உருவாக்கப்பட்டதாகும்.

**கைலாஸ் சத்தியார்த்தி**



2014 -இல் மலாலயோடு சேர்ந்து அமைதிக்கான நோபல் பரிசை பெற்றார். பச்சன் பச்சாவோ என்ற அமைப்பை உருவாக்கி குழந்தை தொழிலாளர் முறைக்கெதிராக செயல்படுத்தப்படுகிறது.

**மலால யூஸப் சாயி**



பெண் குழந்தைகளின் கல்விக்காகப் போராட்டம் நடத்தியதற்காக பதினேழாம் வயதில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

குழந்தைகள் உரிமைகள் மறுக்கப்பட்டால் குழந்தை உரிமை ஆணையத்தில் சென்று புகார் கொடுக்கவும் உரிமையுண்டு.

## பெண்களின் உரிமைகள்




மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்திகளைக் கவனிக்கவும். பெண்கள் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பெண்களுக்கெதிரான வேற்றுமைகளை அறவே ஒழிக்கவும், பெண்களின் பெருமையை நிலைநாட்டவும் 1979- இல் பெண்களின் முன்னேற்றமும் மேன்மையும் பற்றிய உடன்படிக்கையை ஐக்கிய நாட்டுச் சபை அங்கீகரித்தது. பெண்களுக்கான தனிப்பட்ட உரிமைகள் எவை?விளக்கப்படத்தை ஆய்வு செய்யவும்.

ஒரே வேலைக்கு ஒரேசம்பளம்

தேவைக்கான சிறப்புச் சலுகைகள் நஷ்டப்படாமல் ஊதியத்துடன் உள்ள மகப்பேறு விடுப்பு

அரசு உதவிகள் கற்றல் உதவிகள் போன்றவைகளை அனுபவிக்க ஒரே மாதிரியான வாய்ப்பு

எல்லா நிலையிலும் ஆண்களுக்கு இணையான வாய்ப்புகள் பெண்களின் உரிமையாகும். பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேசிய அளவில் தேசிய மகளிர் ஆணையமும், மாநில அளவில் மாநில மகளிர் ஆணையமும் செயல்படுகிறது. பெண்களுக்கெதிரான கொடுமைகள் மற்றும் உரிமை மீறல்கள் போன்ற புகார்களை ஆணையத்தில் சமர்பிக்கலாம். புகார்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகளை ஆணையம் நிறைவேற்றும்.



பெண்களின் உரிமை மீதான மீறல்கள் பற்றியச் செய்திகளும் படங்களும் சேகரித்து செய்திக் கதம்பம் தயாரிக்கவும்.

## உரிமைகளும் கடமைகளும்

உரிமைகள் மட்டுமா நமக்குள்ளது? ஒவ்வொரு உரிமைக்கும் அதோடு தொடர்புடைய கடமைகளும் நமக்கு உண்டு. விளக்கப்படத்தை கவனிக்கவும்.


KT 641-5/ Soc. Sci. (T)- 6 (Vol-2)

| உரிமைகள் | கடமைகள் |
|---|---|
| சுதந்திரம் என்ற உரிமை | தான் அனுபவிக்கும் சுதந்திரம் பிறருக்கும் கொடுக்க வேண்டும் என்ற கடமை |
| குழந்தை என்ற நிலையில் பாதுகாப்பு என்னுடைய உரிமை . | என்னைப் பாதுகாப்பது தாய்தந்தையரின் கடமை |
| முதுமையில் பாதுகாப்பு தாய் தந்தையரின் உரிமை | முதுமையில் தாய்தந்தையரை பாதுகாப்பது என்னுடைய கடமை |
| கல்வியும் அதோடுகூடிய அடிப்படை வசதிகளும் பெறுவது எனது உரிமை | பள்ளிக்கூடச் சட்டங்களை அனுசரிப்பது எனது கடமை |
| உரிமைகள் மறுக்கப்பட்டால் அதனைத் திரும்பப் பெறுவது என்னுடைய உரிமை | நாடு மற்றும் சமூகத்தோடு உள்ள சேவை என்னுடைய கடமை |

சில உரிமைகளும் அதோடு தொடர்புடைய சில கடமைகளும் மேலே கொடுக்கப்பட்டுள்ளன. கடமைகளில்லாமல் உரிமைகள் இல்லை.



உரிமைகள் மற்றும் கடமைகள் தம்மிடையே உள்ளத் தொடர்பினை மதிப்பிடுக.



## தொகுப்பு

- அரசுகளை மக்களாட்சி அரசு என்றும் மக்களாட்சி அல்லாத அரசுயெனவும் வேறுபடுத்தலாம்.
- மக்களாட்சி அரசுகளைப் பிற அரசுகளிலிருந்து வேறுபடுத்தும் முக்கியமான காரணி அவை உறுதி அளிக்கும் உரிமைகளாகும்.
- அரசியலமைப்புச் சட்டத்தில் உட்படுத்தி மக்களுக்கு உறுதி அளிக்கும் உரிமைகளின் தொகுப்பாகும் உரிமைகள் அறிக்கை
- நவீனகாலத்தில் உரிமைகள் பொதுவாக மனித உரிமைகள் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது.
- குழந்தைகள் உரிமைகள், பெண்கள் உரிமைகள் போன்றவை களுக்குத் தனியாக முக்கியத்துவம். மனித உரிமைகளோடு சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.
- உரிமைகளோடு நமக்குக் கடமைகளும் உண்டு.

## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளுக்கிடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளல்.
- மக்களாட்சி அரசின் சிறப்புக்களைப் பட்டியலிடுகின்றனர்.
- மக்களாட்சி அரசு மற்றும் உரிமைகள் தம்மில் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ளல்.
- உரிமை அறிக்கையை விரிவாகப் புரிந்துகொள்ளல்
- உரிமைப் பாதுகாப்பிற்குத் தேசிய அளவில் கடைபிடிக்கப் பட்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்.
- உரிமைகள் மற்றும் கடமைகள் தம்மிடைடே உள்ளத் தொடர்பினை ஆய்வு செய்தல்

## மதிப்பிடலாம்

- மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளின் தனிச் சிறப்புகளை ஒப்புமைப்படுத்துக.
- மக்களாட்சி அரசுகளின் சிறப்புகள் எவை?.

- மனித உரிமைகள் என்றால் என்ன? மனித உரிமைகளின் பாதுகாப்பிற்காகக் கடைபிடிக்கப்பட்டுள்ள முக்கியமான முயற்சிகள் எவை?
- உரிமைகளும் கடமைகளும் தம்மிடையே உள்ள தொடர்பினைத் தெளிவுபடுத்துக

## தொடர் செயல்பாடுகள்

- மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான செய்திகள் மற்றும் படங்களைத் திரட்டி படத்தொகுப்பு தயார் செய்யவும்.
- நீங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் உரிமைகளை அட்டவணைப்படுத்தி அதனோடு தொடர்புடைய கடமைகளை எழுதவும்.
- மக்களாட்சி அல்லாத அரசுகள் நடைபெறும் நாடுகளைக் கூடுதலாகக் கண்டுபிடித்து பட்டியலிடவும்.

## சுயமதிப்பீடு

| | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| மக்களாட்சி மற்றும் மக்களாட்சி அல்லாத அரசுகளின் தனிச்சிறப்புகளை ஒப்பீடு செய்யமுடியும் | | | |
| மக்களாட்சி அரசின் சிறப்புகளை விளக்க இயலும் | | | |
| மக்களாட்சி அரசுக்கும் மக்களின் உரிமைகளுக்குமிடையேயான தொடர்பை மதிப்பிட இயலும். | | | |
| உரிமைகளின் தொகுப்பை வரையறை செய்ய முடியும். | | | |
| மனித உரிமைகளைப் பாதுகாக்க தேசிய அளவிலும் மாநில அளவிலும் கடைபிடிக்கப்படும் நடவடிக்கைகளை விளக்கிக் கூறஇயலும். | | | |
| உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையே உள்ளத் தொடர்பைத் தெளிவுபடுத்த முடியும். | | | |



11

# சமூக வாழ்க்கையில் வேற்றுமைகள்







மேலே காணும் மூன்று படங்களையும் கூர்ந்து கவனியுங்கள் இவை எத்தகைய மக்கள் பிரிவுக ளோடு தொடர்புடையவை என உங்களால் வேறு படுத்திக் காணமுடிகிறதா?

கேரளாவின் சமூகநிலையில் காணப்படும் மூன்று மக்கள் பிரிவுகளின் வாழ்க்கை முறைகளோடு தொடர்புடைய படங்களாகும். இப்படங்கள் அவர் களது சிறப்பான சில வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய வேறுபட்டச் சூழலும் வாழ்க்கை முறைகளும் உள்ள மக்கள் பிரிவுகளைப் பற்றி ஒரு ஆய்வு மேற்கொள்ளலாமல்லவா?அதன்மூலம் நமக்குச் சமூகத்தின் வேற்றுமைகளைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம்.

# கோத்திரச் சமூகம்



தரப்பட்டுள்ள இப் படம் கேரளாவிலுள்ள கோத்திர சமூகங்களுள் ஒன்றுடன் தொடர்புடையதாகும்.

கோத்திர வர்க்கங்கள் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டு வாழ்பவர்கள். நமது தேசத்தில் பழங்கால சமூகங்களின் வழித்தோன்றல்கள் இவர்களாவர். இக்காலத்தில் இவர்கள் பொதுவாகக் காடுகளில் மலை உச்சிகளில் மற்றும் தனிப்பட்ட பள்ளத் தாக்குகளில் வாழ்ந்து வருகின்றனர். .



### கோத்திரம்

ஒரு பொது இடத்தில் வசித்து தனக்கென்று ஒரு மொழியைப் பேசுகின்ற ஒரு மக்கள் கூட்டமே கோத்திர சமூகம். அவர்கள் தனித்தன்மை வாய்ந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றுகின்றனர்.

கேரளாவிலுள்ள பல்வேறு கோத்திர வர்க்கங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? அவற்றை நினைவு கூர்ந்து சிலவற்றின் பெயர்களைக் கண்டுபிடிக்கவும்.

- பணியர்
- குறிச்சியர்
- 
- 
- 
- 
- 

## கோத்திரச் சமூகத்தின் சிறப்புகள்



### கேரளாவில் கோத்திர சமூகங்கள்

1976 –இல் திருத்தம் செய்யப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கானச் சட்டத்தின் படி கேரளாவில் பல பகுதிகளில் 35 கோத்திரச் சமூகங்கள் உள்ளன. பல மாவட்டங்களில் சிதறிக் கிடக்கும் பணியர் சமூகம் கூடுதல் எண்ணிக்கைக் கொண்டது.

இனி நாம் கோத்திர வர்க்கத்தின் சமூக வாழ்க்கையின் தனிச்சிறப்புகளைக் காண்போம்

- கோத்திர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பொதுவாகக் காடுகளின் அருகிலோ, காடுகளிலோ, மலை உச்சிகளிலோ தனித்து காணப்படும் பள்ளத்தாக்குகளிலோ காணப்படுகின்றனர். ஒவ்வொரு கோத்திர வர்க்கத்தினரும் கூட்டம் கூட்டமாக ஓர் இடத்தில் வசிக்கின்றனர். பிற சமூகங்களிலிருந்து அவர்கள் அகன்று வாழ்கின்றனர்.

- இவர்கள் காடுகளிலிருந்து கிடைக்கும் செல்வங்களைச் சேகரித்தும் பாரம்பரிய முறைப்படி வேளாண்மை செய்தும் வாழ்கின்றனர். இவர்களுக்கிடையில் பலரும் பாரம்பரிய குலத் தொழில்களையும் செய்கின்றனர்.
- ஒவ்வொரு கோத்திரச் சமூகத்தினருக்கும் அவர்களுக்கு என்று தனிமொழி உண்டு. அம்மொழிக்குப் பேச்சு வழக்கு மட்டுமேயன்றி எழுத்துக்கள் கிடையாது.

கேரளாவில் மலைவாழ் சமூகத்தினர் பயன்படுத்தும் சில சொற்களைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| **வேண்டியார்** | **: மனைவி** |
| **வேத்தார்** | **: கணவன்** |
| **அப்பன்** | **: தந்தை** |
| **பேப்பன்** | **: தாத்தா** |
| **மோளாரு** | **: மகள்** |
| **மோனாரு** | **: மகன்** |
| **ஆச்சி** | **: அக்கா** |
| **சாட்டன்** | **: அண்ணன்** |

குடும்பத்திலுள்ள உறவு முறையைப்பற்றி மட்டுமல்லாது நாம் இன்று பயன் படுத்தும் பல சொற்களுடைய ஒற்றுமையையும் காணமுடிகிறதல்லவா?

கோத்திர வர்க்கத்தினருக்கு அவர்களுக்கு என்று ஒரு தனி வாழ்க்கை முறை உண்டு. இயற்கையோடு இணைந்து வாழ்பவர்கள். அவர்கள் வாழும் நிலப்பகுதியைச் சார்ந்த கலாச்சாரத்தைக் கொண்டிருந்தனர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.



1 ..................................... 2 ..................................... 3 .....................................

மேற்காணும் படங்களைக் கவனியுங்கள்.

இக்கருவிகளைக் கோத்திர வர்க்கத்தினர் எதற்கெல்லாம் பயன்படுத்தினர்? ஒவ்வொன்றின் பயனையும் படத்தின் அடியில் எழுதவும்.

கோத்திரச் சமூகத்தினர் பயன்படுத்திய கருவிகள் அவர்களது சுற்றுச் சூழலோடு தொடர்புடையது என்பதைக் கண்டீர்களல்லவா?



கோத்திரச் சமூகங்கள் அவர்களுடைய வரலாற்றையோ மற்றும் அவர்களைப் பற்றிய செய்திகளையோ எழுதிவைக்கவில்லை. எனவேதான் அவர்களுடைய நாட்டு அறிவினையோ, நாட்டுப்புற பாடல்களையோ மற்றும் சடங்கு முறைகளைப் பற்றியோ பிறருக்குப் பொதுவாக தெரிவதில்லை. ஆனால் அவர்களுடைய கலைப்படைப்புகளும், பழக்கவழக்கங்களும் அவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டு இன்றும் காணப்படுகின்றன.

கேரளத்திலுள்ள ஒரு கோத்திரப் பிரிவிலுள்ள மலைவேடர்களின் இயற்கையைப் பற்றிய ஒரு பாட்டினைக் கவனியுங்கள்...

**இச்சச்ச மெந்து செய்தேலேலா**
**ஒரு மீந்து சத்து போயேலேலா**
**சத்தம் மீந்து எந்து செய்தே லேலா**
**ஒரு பருந்து றாஞ்சி போயே லேலா**
**ஆ மிந்து எந்து செய்தேலே லா**
**இருளும் அறிந்து போயேலேலா**
**அம்மரம் எந்து செய்தேலேலா**
**செருமீந்து தானும் போயே லேலா**
**கலம்புழேலு தாந்து போயே லேலா**
**கலம்புழேலு தாந்து போலே லேலா**



கேரளாவில் கோத்திர சமூகங்களுக்கிடையில் வழக்கில் உள்ள இது போன்றப் பாடல்களைத் திரட்டி வகுப்பில் வெளியிடவும்.



கோத்திரச் சமூகங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இடம் 'ஊர்' என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் ஒரு தலைவன் காணப்படுவான். அவரை 'ஊரு மூப்பன்' என பாசத்துடன் அழைக்கின்றனர். ஊரின் ஆட்சிக்கு தலைமை தாங்குவது மூப்பன் அல்லது மூப்பனோடு சேர்ந்து அமர்ந்துள்ள முதியவர்கள் அடங்கும் குழுவாகும். திருமணம், பிறச் சண்டை சச்சரவுகள், பழக்க வழக்க முறைகள் என்பவைகளிலெல்லாம் தீர்மானங்கள் எடுப்பதற்கு மூப்பன் மற்றும் முதியவர்கள் அடங்கிய குழுவிற்கோ முழு அதிகாரமும் காணப்படும்.

அருகிலுள்ள ஏதாவது ஒரு கோத்திரச் சமூகத்தின் ஊரை நீங்கள் போய் பார்த்து அவர்களுடைய வாழ்க்கை முறைகளின் தனித்தன்மைகளை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

## கிராமச் சமூகம்

இது பதினோரு வயது நிறைந்த மீனா வரைந்த ஒரு படமாகும். மீனா தன்னுடைய சொந்த நாட்டைப் பற்றி இப்படத்தில் தெளிவாக வரைந்துள்ளாள். இப்படத்தைக் கூர்மையாகக் கவனியுங்கள். இப்படத்தில் மீனா குறிப்பிட்ட சிறப்புத்தன்மையான வாழ்க்கை முறைகள் எவை? எழுதுங்கள்



- பயிர்த்தொழிலோடு சேர்ந்த செயல்பாடுகள்

  .............................................................................................................

  .............................................................................................................

  .............................................................................................................

  .............................................................................................................

- பிற செயல்பாடுகள்

  .............................................................................................................

  .............................................................................................................

  .............................................................................................................

  .............................................................................................................

மேற் குறிப்பிட்ட சிறப்புத்தன்மைகளிலிருந்து மீனாவின் சமூகத்தைப் பற்றி உங்களுக்கு புரிந்து கொள்ள முடிகிறதா? இச் சமூகத்தை நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்.

கிராமச் சமூகத்தின் முக்கிய சிறப்புத்தன்மைகளைக் கண்டுபிடித்து பட்டியலிடவும்.

- 
- 
- 
- 
- 
- 
- 

பாரம்பரிய கிராமச் சமூகத்தின் சிறப்புத் தன்மைகள் எவையெல்லாம் என நாம் பரிசோதிக்கலாம்.

- கிராமப் பகுதிகளில் வாழ்பவர்கள் தங்களை அடுத்து வாழ்பவர் களைப் பற்றி நன்கு அறிந்திருப்பார்கள் முகத்தோடு முகம் பார்த்து பழகியதால் நல்ல நட்புறவு காணப்படும்.
- கிராமமக்களின் ஆடை அலங்காரம் எளிமையானதாக இருக்கும். வாழ்க்கை முறைகளும் பிரச்சினை நிறைந்தது அல்ல.
- வேளாண்மையோடு சேர்ந்த வேலைகள் பாரம்பரிய மிக்க சமூகங்களில் முக்கியமாகக் காணப்படும்.
- கைத்தொழில்கள் ஆடு , மாடு வளர்த்தல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல் போன்றவை கிராமமக்களின் வாழ்க்கைக்கு உதவும் வருமான வழிகளாகும்.

**கிராமங்களில் நடைமுறையிலிருந்த சில தொழில்க ளைக் கண்டுபிடிப்பீர்களல்லவா?**

- மண்பாண்டங்கள் உருவாக்குதல்
-
-
-
-
-

- பாரம்பரியமான கிராமங்களில் கூட்டுக் குடும்ப முறைக்கு மிக முக்கியத்துவம் இருந்தது.
- பல கிராம கூட்டுக் குடும்பத்திற்கு அவர்களுக்கு என்ற குலத் தொழில்கள் இருந்தன.
- அண்டை வீட்டாரோடு உள்ள உறவுக்கு கிராமம் முக்கியத்துவம் தருகிறது. இன்ப துன்பங்களில் அவர்கள் பங்குகொள்கிறார்கள். சடங் குகளிலும் திருவிழாக்களிலும் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.
- கிராம மக்கள் பொதுவாக ஒருவருக்கொருவர் உதவி செய்கிறார்கள்..
- கிராமத்தில் திருவிழாக்களுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. அறுவடை விழாக்கள் கிராமங்களில் மிகமுக்கிய கொண்டாட்டங்களாகக் காணப்படுகிறது.

இந்தியா இன்றும் கிராமங்களுடைய நாடாகும். ஆனால் பல கிராமங்களும் பட்டணங்களும், நகரங்களும் மாற்றமடைகின்றது. பழையகாலக் கிராமங் களுடைய தனித்தன்மைகள் இல்லாமலாவதைக் காணமுடிகிறது.

## மாறிவரும் கிராமங்கள்

கிராமங்களில் இன்று ஏற்படுகின்ற மாற்றங்களை வேறுபடுத்தி அறிய முடிகிறதா? நீங்கள் தெரிந்து கொண்ட பாரம்பரிய கிராமங்களின் சிறப் புத் தன்மைகளிலிருந்து என்னென்ன மாற்றங்கள் இன்றைய சமூகங்க ளில் காணப்படுகிறது? பழங்கால கிராமங்கள் நமது நாட்டில் அன்று போலவே இன்று காட்சியளிக்கவில்லை. காரணம் என்ன?

கிராமங்கள் பட்டணங்களாக, பட்டணங்கள் நகரங்களாக, சில நகரங் கள் மாநகரங்களாகவும் மாறுகின்றன. நகரம் கிராம மக்களைத் தொழில், கல்வி போன்றவற்றால் கவர்ந்து இழுக்கிறது. மும்பை, டில்லி,

கொல்கத்தா, சென்னை, பெங்களூர் ,கொச்சி போன்ற நகரங்களுக்கு பரவலான குடியேற்றங்கள் நடக்கின்றன



உங்களுடைய கிராம/ அயல் கிராமத்தை உற்றுநோக்கி மேலே கலந்துரையாடல் செய்த பராம்பரியம் மிக்க கிராமங்களின் தனித் தன்மைகளில் என்னென்ன வேறுபாடுகள் உள்ளன எனக் கண்டு பிடித்து ஒரு குறிப்பு தயாரிக்கவும்.

## நகரச் சமூகம்

உங்களில் யாராவது ஒரு மாநகரத்திற்குச் சென்றிருக்கீறீர்களா?

ஆறாம் வகுப்பில் படிக்கும் ஷீனா தனது தோழி அர்ச்சனாவுக்கு எழுதிய கடிதத்தை வாசிக்கவும்.

அன்புள்ள அர்ச்சனா!

நான் பெங்களூருவிலிருந்து இக்கடிதத்தை எழுது கிறேன். இந்நகரம் இன்று இந்தியாவில் ஒரு முக்கிய நகரமாக மாறியுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இப்பகுதி இத்தகைய மாந கரமாக வளர்ந்துள்ளது. மிகச்சிறிய கால அளவில் இது ஒரு மாநகரமாக மாறியுள்ளது. எல்லா இடங்களிலும் விண்ணை முட்டும் கட்டிடங்களைக் காணலாம். மாநகரங்களைக் கான்கீரிட் காடுகள் என அழைப்பது எவ்வளவு பொருத்தாக உள்ளது. கட்டிடத்தின் உச்சியைக் காணஇயலாத அளவுக்கு உயரம்.

பெரும்பாலான சாலைகளும் இருவழிப் பாதைகள் வாகன ஊர்திகள் அங்குமிங்கும் செல்கின்றன. இடைவெளியின்றி வாகனங்கள் செல்வதைக் காணலாம். எனவே எந்த இடத்திலும் ரோட்டின் குறுக்கே கடந்து செல்லமுடிவதில்லை. வெள்ளைநிறக் கோடுகள் காணும் பகுதியில் சிக்னல் வழிகாட்டுதலின்படி மட்டுமே சாலைகளைக் கடந்து செல்ல முடியும் மீறினால் விபத்து நிச்சயம்.

வாகனங்களின் ஆதிக்கம் இங்கு சுற்றுச்சூழலை மாசடையச் செய்கிறது. வாகனங்களும் தொழிற்சாலைகளும் சுத்தமான காற்றை நச்சுக் காற்றாக மாற்றுகிறது. குடிநீர்ப் பற்றாக்குறை பெங்களூருவில் முக்கியப் பிரச்சினையாகும்.

நகரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்புகளே காணப்படுகின்றன. பெரிய வீடுகளிலும் அடுக்குமாடிக் கட்டிடங்களிலும் பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர். ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் 200 க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன என்று கூறக் கேட்கிறேன். இங்கு ஏராளம் பெரிய கல்லூரிகளும், பள்ளிக்கூடங்களும் காணப் படுகின்றன. எனினும் பூங்காக்களும் பூந்தோட்டங்களும் உண்டு என்பதும் உண்மையே. ஹைதர் அலியும் திப்புசுல்தானும் ஆண்ட காலத்தில் உருவாக்கப்பட்ட பூந்தோட்டம் இன்றும் காணப்படுகிற து. பொருட்காட்சி சாலைகளும், அருங்காட்சியகங்களும் எத்தனை முறைப் பார்த்தாலும் சலிக்காதவை. உண்மையில், இந்நகரத்தை இன்னும் சில நாட்கள் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று தோன்றுகி றது. அர்ச்சனா! நீயும் இங்கு வருகிறாயா?

பெங்களூரு அன்புடன் ஷீனா'

16 ஜூலை 2014

ஷீனாவின் கடிதத்தை வாசித்த போது உங்கள் மனதில் ஒரு நகரத்தின் காட்சி தோன்றியதல்லவா? நகரங்களின் சிறப்புத்தன்மைகளைப் பற்றி ஒரு விளக்கப்படம் தயாரிக்கலாம் அல்லவா?

## நகரம் : சிறப்புத்தன்மைகள்

- வேறுபாடுகளின் மையம்
  - பலமொழிகள் பேசப்படுகிறது
  - பலவித ஆடை அலங்காரம்
  - பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்கள் ஒன்றாக வாழ்கின்றனர்.
  - பலவித உணவுப் பழக்க வழக்கங்கள்
- பலவித தொழில்களின் மையம்
  - தொழிற்சாலைகள் மற்றும் வணிகத்தோடு தொடர்புடைய தொழில்கள்
  - தொழில்கள் பல்வேறு சமூக, பொருளாதார பிரிவுகளை உருவாக்குகிறது
  - தொழிற்சங்கங்கள் உருவாகிறது
- மிகப்பெரிய கட்டிடங்களின் மையம்
  - அடுக்குமாடி குடியிருப்புகள் - - - -
  - வணிக வளாகங்கள்
  - சிறப்பு அங்காடி
  - மாளிகைகள்
- நாகரீக வாழ்க்கை முறைகள்
  - புதிய ஒப்பனைகள்
  - நவீன வாழ்க்கை முறை
  - பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகள்
- அதிக மக்கட் செறிவு
- சேரிப்பகுதிகள்

## நகரத்திலுள்ள பிரச்சினைகள்



நகரம் பலரையும் கவர்ந்து இழுக்கிறது. பலருக்கு நகரத்தில் வாழ விருப்பமில்லாமலிருப்பதற்குக் காரணங்கள் இல்லையா? தரப்பட்டுள்ள படத்தைக் கூர்ந்து கவனியுங்கள்.

இது நகரத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் காட்டும் ஒரு படம் வாகனங்களின் அதிக எண்ணிக்கை காற்று மாசடைவதற்குக் காரணமாகிறது. அது பலவித நோய்களுக்கு வழிவகுக்கிறது.

இதுபோல நகரம் பலவித பிரச்சினைகள் நிறைந்த மையம் என்று அறிவீர்களல்லவா? நகரத்தில் பலவித வசதிகள் உள்ளது என்பதும் உண்மையே.

ஆனால் நகர வாழ்க்கைச் சிலருக்கு கஷ்டமானது. சுகவசதிகளோடு வாழ்க்கையைக் கொண்டாடுகின்ற மேல்தட்டு மக்களும். சேரிகளிலும் சாலை ஓரங்களிலும் வாழ்கின்ற கீழ்நிலையிலுள்ளவர்களும் நகரத்தில் வசிக்கிறார்கள். ஆனால் பல பிரச்சினைகள் நகரத்தில் உள்ள எல்லோரிடமும் தாக்கம் செலுத்துகிறது. அவற்றைக் காண்போம்.




நகரத்திலுள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி செய்தித்தாள்களிலிருந்து தகவல்கள் திரட்டவும், . போக்குவரத்து நெரிசல், சேரிகள், போதைப்பொருட்களின் தவறான பயன்பாடு, குற்றச் செயல்கள் போன்றவைகளைப் பற்றியுள்ள செய்திகளைத் திரட்டித் துண்டு பிரசுரம் தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

நகரத்திலும் கிராமத்திலுமுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ன? குழுக்களாகக் கலந்துரையாடல் நடத்தவும். கலந்துரையாடலுக்கு இந்த விளக்கப் படத்தைப் பயன்படுத்தலாம்.

**நகரத்திலுள்ள பிரச்சினைகள்- தீர்வுக்கான வழிகள்**

- முறைப்படியான திட்டமிடல்
- சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத கட்டுமானச் செயல்பாடுகள்
- குடியிருப்புக் கொள்கை
- வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கான அடிப்படை வாய்ப்புகள்






## தொகுப்பு

- பெரும்பாலான கோத்திரச் சமூகங்கள் குன்றுகளிலும் வனப்பகு திகளிலும் வாழ்கின்றனர்.
- கோத்திரச் சமூகத்தினருக்கு அவர்களுக்கே உரிய கலாச்சாரமும் வாழ்க்கை முறையும் உண்டு.
- கோத்திரச் சமூகத்தின் மொழியும் கலாச்சாரமும் வாய்மொழி யாகவே பின்தலைமுறையினருக்கு கடத்தி விடப்படுகிறது.
- கிராமத்தின் சிறப்புகள், பழங்காலத்தோடு உள்ள தொடர்பு, விவசாயம் சார்ந்த தொழில்கள் குடும்பம் மற்றும் அண்டை வீட்டாரோடு உள்ள நட்புறவு, கொண்டாட்டங்களின் தாக்கம் முதலியன ஆகும்..

- நகரத்தின் சிறப்புகள், வேறுபாடுகள் நிறைந்த சமூகம், பலவித தொழில்கள் சமூகமாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மை என்பன.
- சேரிகள், மாசடைதல், போக்குவரத்து நெரிசல் போன்றவை நகர சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள்.
- முறைப்படியான திட்டமிடுதல் மூலம் நகரத்தில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.



## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- கோத்திரச் சமூகத்தின் சிறப்புகளைப் புரிந்து விவரித்தல்.
- கிராமச் சமூகத்தின் சிறப்புகளை அறிந்து ஆய்வு செய்தல்.
- கிராமச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து விவரித்தல்.
- நகரச் சமூகத்தின் சிறப்புகளை அறிந்து கிராமச் சமூகங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தல்.
- நகரச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அதற்கான தீர்வு வழிமுறைகளை வகுக்கவும் முடிகிறது.



## மதிப்பிடலாம்

- கோத்திரச் சமூகத்தின் சிறப்புகள் எவை?
- கிராமச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்து கொண்டு விளக்கவும்.
- "நகர வாழ்க்கை நரக வாழ்க்கைக்கு சமமானது." இக் கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் பதிலை நியாயப் படுத்தவும்.

- கிராமச் சமூகம் மற்றும் நகர சமூகத்தின் சிறப்புத் தன்மைகளை ஒப்புமைப்படுத்தி அட்டவணை தயார்செய்க.

| கிராமச் சமூகம் | நகரச் சமூகம் |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |
| • | • |



## தொடர் செயல்பாடுகள்

- உங்களுக்கு அருகிலுள்ள ஒரு நகரத்தைப் பார்வையிட்டு அங்கு காணப்படும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றிய அறிக்கை ஒன்று தயார் செய்க

  குறிப்புகள்

  - போக்குவரத்து நெரிசல்
  - சேரி
  - குடியிருப்பு இடப் பற்றாக்குறை
  - குடிநீர்ப் பற்றாக்குறை

- கோத்திரச் சமூகத்தின் கலைப்படைப்புகள் மற்றும் பாட்டுகளைச் சேகரித்து ஒரு பதிப்பு தயார் செய்க

KT 641-6/ Soc. Sci. (T)- 6 (Vol-2)

## சுயமதிப்பீடு

| | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| கோத்திரச் சமூகத்தின் தனிச்சிறப்புகளை விவரிக்க இயலும். | | | |
| கிராமச் சமூகத்தின் தனித்தன்மைகளை விவரிக்க இயலும். | | | |
| நகரச் சமூகத்தின் தனிச்சிறப்புகளை வேறுபடுத்திக் காண இயலும். | | | |
| இன்றைய கிராமங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்து பட்டியலிட இயலும். | | | |
| கிராம, நகர சமூகங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொள்ள இயலும். | | | |
| நகரச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து கொள்ள இயலும். | | | |
| நகரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சில வழிமுறைகளை எடுத்துரைக்க இயலும். | | | |
| | | | |

12



# இயற்கையின் நன்கொடை

“உலகிலேயே மிகவும் வளமான நாடு” பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள 21 சதுரகிலோமீட்டர் மட்டும் பரப்பளவுள்ள நௌரு (Nauru) என்ற சிறிய தீவை உலகப்புகழ் பெற்ற இதழான நேசனல் ஜியோகிரபிக் 1976- இல், இவ்வாறு சிறப் பித்துக் கூறியது. பச்சைப்பசேல் என்ற இந்தத் தீவு ஏராளமான வலசை போகும் பறவைக் கூட்டங்களின் வாழிடமாக இருந்தது. ஆனால் நௌரு இன்று ஒரு தரிசு நிலமாக உள்ளது. தீவிலுள்ள வளங்களெல்லாம் காணமல் போனது. எங்கும் பவிழப் பாறைகளாகக் காணப்படும் வெறுநிலம்... எதனால் நௌரு இவ்வாறானது என்றறிய வேண்டாமா? இரசாயன உரம் உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் பாஸ்பேட் என்ற தாது வளத்தால் நிறைந்திருந்தது நௌரு 1888- இல் ஜெர்மனி இங்கு காலனி அமைத்துப் பாஸ்பேட் தோண்டத் துவங்கியதோடு தீவிற்கு அழிவு தொடங்கியது. முதல் உலகப் போருக்குப் பிறகு பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளும் இங்கு பாஸ்பேட் எடுக்கத் துவங்கியது. பாஸ்பேட்டை எடுக்க துவங்கியதுடன் நௌரு ஒரு செல்வச் செழிப்பான நாடாக மாறியது. ஆனால் அதிகமாகப் பாஸ்பேட் தோண்டி எடுக்கப்பட்டதால். அத்தீவின் தாவர வளம் அழிந்தது. அத்துடன் பறவைகளும், உயிரினங்களும் காணாமல் போயின. நௌருவின் சுற்றுச்சூழலே மாறியது. பாஸ்பேட் எடுத்தலும் நின்று போனது.அவ்வாறு நௌரு ஒரு முற்றிலும் வறுமையான நாடாகியது எல்லா விதத்திலும்

பாஸ்பேட் என்ற தாது வளத்தால் செல்வச் செழிப்பாகவும் பிறகு அந்த தாதுவளத்தை அதிகமாக எடுத்ததன் பலனாக வறட்சியும் ஏற்பட்ட நௌரு என்ற நாட்டைக் குறித்து வாசித்தீர்களல்லவா. நௌருவின் வரலாற்றை வாசித்த போது உங்களுடைய மனதிலும் கீழே கொடுக் கப்பட்டுள்ள வினாக்கள் உருவெடுத்திருக்குமல்லவா?

***இயற்கை வளங்கள் என்றால் என்ன?***

***இயற்கை வளங்கள் குறைவது எப்படி?***

***இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டுமா?***

வளங்கள், வளங்களை அழித்தல், வளங்களைப் பாதுகாத்தல் என்பன வற்றைக் குறித்துக் கூடுதல் அறிய இவ்வலகு உங்களுக்கு உதவும்.

இயற்கையானதும் மனிதனுக்கு உதவுவதுமான பொருட்களே வளங்கள் என்று கூறப்படுகிறது. இயற்கையிலிருந்து கிடைக்கும் சில வளங்களின் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.


பாறைகள்


நீர்


மண்


காற்று


தாதுக்கள்


சூரிய ஒளி

இயற்கையிலிருந்து நேரடியாகக் கிடைப்பதும் பயன்படுத்துவதற்கு உகந்ததுமான இப்பொருட்களை இயற்கை வளங்கள் என்கிறோம்.

வாயு, சூரியஒளி, காற்று, மரங்கள், நீர் என்றிவ்வாறு எண்ணிலடங்காத வளங்களினால் செழிப்பானதே நமது இயற்கை.



இயற்கை வளங்களுக்கு எத்தனை எடுத்துக்காட்டுகள் உங்களால் எழுதமுடியும்? அவற்றின் பயன்களையும் எழுதவும்.

நீங்கள் கண்டடைந்த வளங்களில் சில உயிருள்ளவை. ஆனால் சில உயிரற்றவை. உயிருள்ள வளங்களை உயிர் வளங்கள் என்றும் உயிர் இல்லாத வளங்களை உயிரற்ற வளங்கள் என்றும் அழைக்கிறோம்.

புவியில் மனிதன் கண்டுபிடித்து பயன்படுத்துவதற்குத் தகுந்ததாக மாற்றிய இயற்கை வளங்களில் சில எக்காலத்திலும் கிடைப்பதாகும். ஆனால் வேறு சில வளங்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ப அழிந்து கொண்டிருப்பவையாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வளங்களை எப்போதும் கிடைப்பது என்றும் பயன்படுத்துவதற்கேற்ப அழிந்து கொண்டிருப்பவை என்றும் வேறுபடுத்தி அட்டவணையில்( அட்டவணை 12. 1) உட்படுத்தவும்.



காற்று



நிலக்கரி




நீர்



இயற்கை எரிவாயு




சூரியஒளி



வனம்




பெட்ரோலியம்



மண்



இரும்புத்தாது

| எல்லா காலத்திலும் கிடைக்கும் வளங்கள் | பயன்பாட்டிற்கேற்ப அழிந்து போகும் வளங்கள் |
|---|---|
| • காற்று<br>•<br>• | • நிலக்கரி<br>•<br>• |

**புனரமைக்கப்படும் வளங்கள்**

**புனரமைக்க முடியாத வளங்கள்**

பட்டியல் **12.1**

## அதிகரிக்கும் தேவைகள், குறைகின்ற வளங்கள்

மனிதர்கள் இயற்கை வளங்களைத் தங்களுக்குடையது மட்டுமே என்ற எண்ணத்தில் அவரவர் விருப்பப்படி சுயநலமாகப் பயன்படுத்து கின்றனர். மக்கள் தொகைப் பெருக்கம், அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம், மேம்பட்டத் தொலைத்தொடர்பு வசதிகள், தொழில்மய மாக்கல் போன்றவை இயற்கை வளங்களின் தேவையை அதிகரிக்கச் செய்தது. இது அதிகமான வளங்கள் குறைவதற்குக் காரணமானது. கட்டுப்பாடில்லாத பயன்பாட்டின் வழி வளங்களின் அளவில் ஏற்படும் குறைவே குறைகின்ற வளங்கள் எனப்படுகிறது. இயற்கையை, இயற்கைக்குப் புறம்பாகச் சுரண்டுவதன் மூலம் பல அரிதான வளங்கள் குறைவதற்கும் அதன் குணத்தில் மாற்றங்கள் உருவாவதற்கும் காரணமாகிறது. வளங்களின் தரத்தைப் பாதிக்கக்கூடிய அளவிலான செயல்பாடுகளும் சுரண்டலாகும்.



*நான் எனக்கும் என்னுடைய வரும் தலைமுறையினருக்காகவும் போராடுகிறேன். ஓராயிரம் பட்டினி குழந்தைகளுக்காக... புவியிலிருந்து அழிந்து கொண்டிருக்கும் தாவரங்களுக் காகப் போராடுகிறேன். அவர்களுக்குப் புவியில்லாமல் வேறொரு இடமில்லை. அவை களின் வேண்டுதலை யாரும் கேட்கவில்லை.*

*எனக்குச் சுவாசிக்கப் பயமாக உள்ளது. தெரியவில்லை எவ்வளவு நச்சு கலந்த காற்று இது..... நான் வெளியே செல்ல பயப்படுகிறேன்... காரணம் வளிமண்டலத்திலுள்ள ஓசோணின் துளைகள்...*

*என்னுடைய குழந்தைகளும் காண்பதற்காக மீதம் வைத்திருப்பீர்களா? இந்த மழைக் காடுகள், விலங்குகள், வண்ணத்துப்பூச்சிகள்...உங்களின் சிறுவயதில் இவ்வாறு நினைத்த துண்டா...*

*உங்களுக்கு இனியும் புவியைப் பாதுகாக்க நேரம் உண்டெனக் கருதுகிறீர்களா?..*
*உங்களால் சால்மண் மீன்களைத் திரும்பக் கொண்டுவரமுடியவில்லையெனில்...*
*பாலைவனங்களாக மாறிய காடுகளைத் திரும்பக் கொண்டுவர முடியாவிட்டால்*
*நிறுத்துங்கள் தயவுசெய்து... இவைகளை அழிக்காதீர்கள்.*


1992 –இல் பிரேசிலில் உள்ள றியோ டி ஜெனிராவில் வைத்து நடந்த ஐ. நா. சபையின் முதல் புவி உச்சிமாநாட்டில் பல்வேறு உலக நாடுகளின் உறுப்பினர்கள் அடங்கிய மேடையை அமைதியாக்கிய உரையை மொழிபெயர்ப்பு நடத்தியதன் முக்கிய பகுதியே மேலே கொடுக்கப் பட்டுள்ளது.. 12 வயது மட்டுமே உடைய செவெண் சுசுகி என்ற கனடாவை சேர்ந்த சிறுமியே இவ்வுரையாற்றியது.

அப்பெண் குழந்தை தனது உரையின் வழி என்னென்ன கவலைகளைக் கூற முயன்றாள்?

- மாசடைகின்ற காற்று
- அழிக்கப்படுகின்ற காடுகள்
- பூமியிலிருந்து காணாமல் போகின்ற விலங்குகள்.
- 
- 



1972 ஜூனில் ஸ்டாக் ஹோமில் வைத்து நடந்த ஐநா சபையின் மாநாட்டில் மனித சுற்றுச் சூழலைக் குறித்து இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆற்றிய உரை. ஐ. நா.சபையை ஜூன் 5 உலகச் சுற்றுச்சூழல் தினமாகக் கொண்டாடுவதற்கான தீர்மானத்தை எடுக்க வைத்தது.



மனிதன் அதிகமான வளங்களைச் சுரண்டியதன் வழி புவியிலிருந்து இனம் அற்றுப்போன உயிரினமே டோடோ பறவை. இந்தியப் பெருங்கடலில் உள்ள மொரிஷியஸ் தீவில் காணப்பட்டிருந்த இந்த பறவைகளை மாமிசத்திற்காகக் கொன்று குவித்ததால் இப்பறவைகள் புவியிலிருந்து காணமல் போய்விட்டது இந்தியாவில் காணப்பட்ட அறோச் என்ற கால்நடைகள், ஆசிய சிறுத்தைப் புலி போன்ற விலங்குகளும் இனம் அழிந்து போனவையாகும்.



கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைக் கவனிக்கவும். நாம் வளங்களைக் கவனக்குறைவோடு பயன்படுத்துவதால் எதிர்காலத்தில் என்ன நடக்கும்? படங்களுக்கு அடிக்குறிப்பு எழுதுங்கள்.




.............................................




வனங்கள் தரிசு நிலமாக மாறும்




.............................................




.............................................



நீர், மண், பெட்ரோலியம், வனம் போன்ற இயற்கை வளங்கள் இயற்கையிலிருந்து இல்லாமல் போய்விட்டால் என்ன நடக்கும்? கலந்துரையாடவும்.

ஒவ்வொரு வருடமும் 30 லட்சம் குபிக் மீட்டர் மரத்தை மனிதன் பயன்படுத்து வதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு வினாடியிலும் ஏறக்குறைய ஒரு கால் பந்து மைதானத்தின் அளவு வளங் களை மனிதன் வெட்டி அழிக்கிறான். இந்த நிலை தொடர்ந்தால் 2020 ஆகும் போது இப்போதுள்ள வனத்தின் பாதி அளவு மட்டுமே புவியில் எஞ்சும் என்று ஆராய்ச்சியின் வழி தெரிய வந்துள்ளது.



## வளங்களைப் பாதுகாத்தல்

வளங்களை முறையாகவும் கவனமாகவும் பயன்படுத்தலும் அவை மீண்டும் வளர்வதற்கான நேரத்தை அனுமதித்தலும் என்பதே வளங்களைப் பாதுகாத்தலின் அடிப்படையாகும்.













கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு படங்களின் சூழலும் வனப்பாது காப்பிற்கு எவ்வாறு உதவுகிறது என்று கலந்துரையாடவும்..



**இந்த நாட்கள் இயற்கைக்காக**

ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினம்
ஏப்ரல் 22 உலக பூமி தினம்

## பயிற்சித்தாள்

வளங்களைப் பயன்படுத்துதலைக் குறிப்பிடுகின்ற செயல் பாடுகள், அதன்வழி குறைந்து கொண்டிருக்கும் வளங்கள், மாற்று வழிகள் என்றிவ்வாறு அட்டவணையி லுள்ள கட்டங்களை( அட்டவணை12. 2) முறையாகப் பொருத்தவும். மேலும் மாற்று வழிகளை எழுதுவீர்களல்லவா.

| கூடுதல் வளங்களைப் பயன்படுத்துதல் | இயற்கை வளங்கள் | மாற்று வழிகள் |
|---|---|---|
|  | தண்ணீர் தடங்கள் | • பொது போக்குவரத்தை அதிக மாகப் பயன்படுத்தவும்<br>• வளிமண்டல வாயு மாசடையாத எரிபொருட்களைப் பயன்படுத்தவும்<br>• |
|  | காடுகள் | • குடிநீரை வீணாக்காமல் பாதுகாக்கவும்<br>• மழைநீரைப் பாதுகாக்கும் வழிகளைக் கடைபிடிக்கவும்<br>• |
|  | வளிமண்டலம் | • மின்சாரக் கருவிகளும் விளக்குகளும் தேவைக்குப் பயன்படுத்தவும்<br>• இயற்கையான ஆற்றல் உறைவிடங்களான சூரியஒளி, காற்று போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தவும்<br>• |
|  | ஆற்றல் உறைவிடங்கள் | • வனங்கள் அழித்தலை தடுக்கவும்<br>• வெற்றிடங்களில் மரங்களை நடுதல் வேண்டும்<br>• |

பட்டிக 12.2

புவியில் இயற்கை வளங்கள் ஒரு வரம்பிற்கு உட்பட்டதென்றும் அவற்றைப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும் புரிந்ததல்லவா. தேவையான அளவு வளங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமை நமக்குள்ளது. ஆனால் வரும் தலைமுறைகளுக்கும் இயற்கை வளங்கள் தேவையென்பதைப் புரிந்து கொள்ளாமல் அதிகமாகப் பயன் படுத்துவதற்கு நமக்கு உரிமையில்லை." இயற்கை வளங்களை அறிவு பூர்வமாகப் பயன்படுத்துவோம்" என்பதே நமது முத்திரை வாக்கியம்.



### வளங்களைப் பாதுகாத்தலும் இந்தியாவிலுள்ள சட்டங்களும்

அதிகமான அளவு வளத்தைச் சுரண்டுவது மனித வாழ்க்கைக்கே கேள்விக்குறியாக மாறியபோது இயற்கைக்குப் புறம்பாக செயல்படுவதில் கட்டுப்பாடு வேண்டுமென்ற சிந் தனையிலிருந்து உருவானதே இச்சட்டங்கள்.

1. இயற்கையைப் பாதுகாத்தல் இந்திய குடிமகனின் கடமையென்பதை உணர்த்துகின்ற இந்திய அரசியலமைப்பின் 48 எ பிரிவும் 51 எ.ஜி பிரிவும்.
2. இயற்கையைப் பாதுகாக்கும் சட்டம்
3. தண்ணீர்ச் சட்டம்
4. வனப்பாதுகாப்புச் சட்டம்
5. வாயுச் சட்டம்
6. தேசிய இயற்கை நீதிமன்றம்( தீர்ப்பாயம்)




### கேரளத்தில் வளங்களைப் பாதுகாத்தல்

பெரியார் நதியைப் பாதுகாப்பதற்கான மக்களின் போராட்டம் 1990- இல் வாட்டர் அத்தாரிட்டி நிறுவுவதற்கு காரணமாகியது. இவ்வாறான மக்கள் போராட்டங்களின் வழியும் அரசாங்கத்தின் தொடர்புமூலமும் பல சட்டங்கள் வளங்களைப் பாதுகாப்பதற்காகக் கேரளத்தில் உருவானது. (எ.கா) தண்ணீர் தடங்கள் பாதுகாப்புச் சட்டம்.

## முறையான வளர்ச்சி பாதுகாப்பான இயற்கை

வரும் தலைமுறைகளுக்கு அவர்களுடைய தேவைகளை நிறைவேற்று வதற்கான திறன்களில் குறைவு ஏற்படாமலேயே இன்றைய தலைமுறை கள் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதே முறையான வளர்ச்சி



*"நாம் அனைவருடையவும் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வளங்கள் இங்குள் ளன ஆனால் ஒருவரின் பேராசையைக் நிறைவேற்றத் தேவையானதில்லை"*

***காந்திஜி***

வளங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல், அவைகளின் பயன்பாட்டைக் குறைத்தல், அவைகளைப் புனரமைத்துப் பயன்படுத்துதல் என்பவையே முறையான வளர்ச்சியை அடைவதற்கான வழிகளாகும்

## முறையான வளர்ச்சிக்காக என்ன செய்யலாம்

### நாம் ஒன்றாக



- சமையலறையில் பயன்படுத்துகின்ற தண்ணீரைச் செடிகளுக்கு ஊற்றலாம்.
- பொது இடங்களில் மரங்களை நட்டு வளர்த்தலாம்.
- இயற்கை ஆற்றலின் உறைவிடங்களைச் சூரிய ஆற்றல், காற்றிலிருந்துள்ள ஆற்றல் போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தலாம்.



- மழைநீர் பாதுகாப்பதற்கான வழிகளை உறுதிப்படுத்தவும்
- நெகிழி பைகளுக்குப் பதிலாகத் துணிப்பைகளைப் பயன் படுத்தவும்
- 

### நான் இன்று முதல்...



- மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்க
- மின்விளக்குகளையும் , மின் விசிறிகளையும் தேவைக்குப் பயன் படுத்துவேன்.
- தரமான மின் கருவிகளை உபயோகிப்பேன்.
- சாதாரண மின் விளக்குகளுக்குப் பதிலாக எல்.இ.டி விளக்குகளைப் பயன்படுத்துவேன்.
- 
- 



- இந்தப் பொருட்களை மீண்டும் பயன்படுத்துவோம்
  - காகிதம்
  - புட்டி(Bottle)
  - துணி
  -
  -



- சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற செயல்பாடுகளில் பங்கு கொள்வேன்.
- தேவைக்கு மட்டும் வளங்களைப் பயன்படுத்துவேன்.
-
-




**இயற்கை வளங்கள்**

புனரமைக்கக் கூடியவை | புனரமைக்க முடியாதவை

வளங்களைச் சுரண்டல்

வளங்களைப் பாதுகாத்தல்

## தொகுப்பு

- இயற்கையிலிருந்து கிடைப்பதும் மனிதனுக்குப் பயனுள்ளதுமான பொருட்கள் வளங்கள் என்றழைக்கப்படுகின்றன.
- இயற்கை வளங்களில் சில எக்காலத்தும் கிடைக்கக் கூடியதும் சில பயன்படுத்துவதற்கேற்ப குறைந்து விடுவதுமாகும். இவை முறையே புனரமைக்கப்படுபவை, புனரமைக்க முடியாதவை எனக் கூறப் படுகிறது.
- கட்டுப்பாடில்லாத பயன்பாட்டின் வழி வளங்களின் அளவிலும் தரத்தி திலும் ஏற்படும் குறைவே வளங்களின் சுரண்டல் எனப்படுகிறது.
- வளங்களை முறையாகவும் கவனத்தோடும் பயன்படுத்துதலும் அவை மீண்டும் புனர்வாழ நேரம் அனுமதிப்பதும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகும்.
- வரும் தலைமுறையின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்களைப் பாதுகாக்கும் முறையே முறையான வளர்ச்சி எனப்படுகிறது.

## முக்கிய கற்றல் அடைவுகளில் உட்படுபவை

- இயற்கையிலிருந்து நேரடியாகக் கிடைப்பதும் பயன்படுத்துவதற்கு ஏற்றதுமான பொருட்களை இயற்கை வளங்கள் என்று அறிந்து கொண்டு அட்டவணை தயாரிக்கிறார்கள்.
- இயற்கை வளங்களைப் புனரமைக்கக்கூடியவை புனரமைக்க முடி யாதவை என வேறுபடுத்தி வரிசைபடுத்துகின்றனர்.
- முறையற்றதும், கட்டுப்பாடில்லாததுமான வளங்களின் பயன்பாடு வழி இயற்கையிலுள்ள வளங்களுக்கு வருங்காலத்தில் ஏற்படும் அழிவு களைக் கண்டறிந்து எழுதுகின்றனர்.
- வளங்களைப் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு பல்வேறு வழிகளைக் கூறுவதுடன் அதனை அட்டவணைப்படுத் துகின்றனர்.
- முறையான வளர்ச்சி என்பதின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு முறையான வளர்ச்சிக்காகக் குழுவாகவும் தனியாகவும் செயல்படுகின்றனர்.



# மதிப்பிடலாம்

- விவசாயியான ராகவன் பாரம்பரிய விவசாய முறையிலேயே விவசாயம் செய்கிறான். இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல் கால்நடைகளை வைத்து நிலத்தை உழுதல் போன்றவை. இங்கு ராகவன் எந்தெந்தத் தரத்திலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்கிறான்? அவை எவையென அட்டவணைப்படுத்தவும். இயற்கை வளங்கள் என்றால் என்ன?
- மரம், சூரிய ஒளி, மீன்கள், காற்று, கால்நடைகள், தண்ணீர் என்பவைகள் சில இயற்கை வளங்களாகும். உயிருள்ள வளங்கள், உயிரற்ற வளங் கள் எனத் தரம்பிரித்து அட்டவணைப்படுத்துகின்றனர்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ளது இரண்டு கார்களின தனித்தன்மைகள் ஆகும். இவை ஒவ்வொன்றினுடையவும் தனித்தன்மைகளைக் கண்டறிந்து சரியான கட்டத்தில் எழுதவும்

கார்- A : சூரிய ஆற்றலில் இயங்கக்கூடியது
கார்- B : பெட்ரோல் எரிபொருளால் இயங்கக்கூடியது

**தனித்தன்மைகள்**

1. வளிமண்டலம் மாசடைவதில்லை
2. புனரமைக்க முடியாத எரிபொருள்கள் பயன்படுத்தப்படுகிறது.
3. வளிமண்டலத்திலுள்ள கார்பன் டை ஆக்சைடின் அளவு கூடுகிறது.
4. இப்படிப்பட்ட கார்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
5. இப்படிப்பட்ட கார்கள் மிகக்குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன.
6. புனரமைக்கப்படும் பொருள் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

| கார் A | கார் B |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |

7. இதில் எந்த கார் இயற்கைக்கு உகந்ததாக உள்ளது? உங்களுடைய பதிலை எழுதவும்?

- ' வளங்களை நாம் கடன் வாங்கினோம்' என்ற கூற்றைப் பகுப்பாய்வு செய்து முடிவுகளை எழுதவும். வளங்களைப் பாதுகாப்பதற்கான எவையேனும் ஐந்து வழிகளை எழுதவும்.

## தொடர் செயல்பாடுகள்

- இவ்வுலகிலிருந்து அழிந்து கொண்டிருக்கும் விலங்குகள் பறவைகள் போன்றவற்றின் அட்டவணை தயார் செய்து சமூக அறிவியல் வகுப்பில் வெளியிடவும்
- உலகச் சுற்றுச்சூழல் தினம், பூமி தினம் போன்றவற்றைக் கொண்டாடுவதுடன் இந்நாட்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்ற சார்ட்டுகள் எழுதி வெளியிடவும்.
- பள்ளிக்கூடத்தின் சுற்றுப்புறத்தில் செடிகள் நடவும் அவைகளைப் பாதுகாக்கவும் குழுவாகச் செயல்படவும்

## சுய மதிப்பீடு

| | முழுமையாக | ஓரளவு | சிறிதுமில்லை |
|---|---|---|---|
| இயற்கை வளங்களைப் புரிந்துகொண்டு வேறுபடுத்த முடிகிறது. | | | |
| புனரமைக்கக்கூடியவை, புனரமைக்க முடியாதவை என வளங்களை வேறுபடுத்தி அட்டவணைப்படுத்த முடிகிறது. | | | |
| வளங்களின் சுரண்டலுக்குக் காரணமான செயல்களைப் புரிந்துகொள்ள முடிந்தது. | | | |
| வளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு கூறமுடிகிறது. | | | |
| வளங்களைப் பாதுகாக்க வேண்டிய வழிகளை அட்டவணை செய்ய முடிகிறது.. | | | |
| முறையான வளர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க முடிகிறது. | | | |